Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



வெலா சலூன்

WELLA

Wella Hair Dressing

(குளிரூட்டப்பட்டது)

Haircuts, Facials, Stranghting

சலூனுக்கு தேவையான உபகரணங்கள் விற்பனைக்குண்டு.



இல,08, பருத்தித்துறை வீதி,
நல்லூர் மாக்கற்,
கல்வியங்காடு. T.P 0773144965

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி - 23 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-ஆகிர் 31 (08.08.2005) திங்கட்கிழமை இதழ்:312

# கிழக்கு ஆயுதக் குழுக்களால் யுத்தம் வெடிக்கும் ஆபத்து!

## எச்சரிக்கிறார் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹொக்லண்ட்



கொழும்பு —

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு கிழக்கில் செயற்படும் ஆயுதக் குழுக்களே தடையாக இருப்பதாகவும் -

இதனால் மீண்டும் யுத்தம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக வும் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்தார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தமக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு ஆர்வமாக உள்ளபோதிலும் கிழக்கில் இயங்கும் ஆயுத சக்திகள் அதற்குத் தடையாக உள்ளன.

இலங்கையில் - படையினரும், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் கொல்லப்படும்போது இரு பகுதியினரும் மாறிமாறி குற்றச்சாட்டுக்களை சுமத்திவரும் நிலையிலும் - போர்நிறுத்த ஒப்பந்தம் நிலைத்து நிற்கும். இந்தக் கொலைகளைத் தவிர்க்கவேண்டுமாக இருந்தால் இரண்டு பகுதியினரும் தமக்கிடையிலான பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். போர்நிறுத்த ஒப்பந்தம் நிலைத்து நிற்குமென்பதில் எனக்கு பூரண நம்பிக்கையுள்ளது. உடனடியாக யுத்தம் ஒன்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தத்தைப் பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டும்!

### விதார் ஹெல்கிசன் கோரிக்கை



கொழும்பு —

சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

நேற்று மாத்தறைக்கு விஜயத்தை மேற்கொண்டு நிலைமைகளை நேரில் பார்வையிட்ட பின்னர், ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் - இந்தச் சந்தர்ப்பத்தில் இரண்டு தரப்பினரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இன்று துக்கதினம் அனுஷ்டிப்பு

கொழும்பு —

இணுவில் பகுதியில் சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தவேளை இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதலால் உயிரிழந்த ஜெயசீலன் சாந்தரூபனுக்கு அஞ்சலி செலுத்தவும், மேற்படி சம்பவத்தைக் கண்டித்தும் இன்று திருகோணமலையிலும் துக்கதினம் அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையும், ஐக்கிய மருத்துவ (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜாதிக ஹெல உறுமய கட்சியின்

## ஜனாதிபதி வேட்பாளராக ஜானக பெரேரா தெரிவு?



கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஹெல உறுமயவின் வேட்பாளராக மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை நியமிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவை வழங்குவதானால் - தமது கோரிக்கைகள் ஏற்கப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய நிபந்தனை விதித்திருந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு சவுக்கடியில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சவுக்கடி என்ற இடத்தில் 22 வயது இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் வீதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சிவராசா மரியபாலன் என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மீனவரான இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## ‘தமிழின விடியல் புலிகள் இயக்கம்’ தமிழகத்தில் புதிய கட்சி ஆரம்பம்!

### ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் தீர்மானம்

சென்னை —

தமிழகத்தில் புதிதாக தொடங்கப்பட்டிருக்கும் தமிழீழ விடியல் புலிகள் இயக்கம் என்ற கட்சி -

ஈழத்தமிழர்களின் விடிவுக்கு தனித்தமிழீழமே நிரந்தரத் தீர்வு என்றும், ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க எத்தனை தியாகத்தையும் செய்யத்தயாராக இருப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த மாதம் மதுரையில் தமிழின விடியல் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கட்சியை ஆரம்பித்திருப்பவர் மதுரை தி.மு.க முன்னாள் இளைஞர் அணிச் செயலாளர் பசும்பொன் பாண்டியன் ஆவார்.

கட்சியின் தொடக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முக்கியமாக -

· இலங்கையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## செங்கலடி சந்தையில் குண்டுவெடித்து இருவர் காயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - செங்கலடி சந்தைக் கட்டடத் தொகுதியிலுள்ள பழக்கடையொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் இருவர் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இருதயபுரத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் ரவீந்திரன் (வயது 40) மற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவிலில் ஷெல் வெடித்து குடும்பஸ்தர் பலி!

சாவகச்சேரி —

மட்டுவில் பகுதியில் வீட்டுக்காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்தவேளை - புதையுண்டிருந்த ஷெல் வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

நேற்று மாலை 5 மணியளவில் மட்டுவில் - கண்ணகை அம்மன் கோவிலுக்கு சமீபமாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குழந்தையன் திருநாவுக்கரசு (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை ஜே.வி.பி. எம்.பியின் அலுவலகம் மீது தாக்குதல்!

திருகோணமலை —

திருகோணமலை மாவட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகரவின் அலுவலகத்தின் மீது நேற்று நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 1.10 மணியளவில் திருகோணமலை மாவட்டம் - கந்தளாய் ரஜவெல வீதியிலுள்ள ஜே.வி.பியின் அலுவலகமே கைக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானது.

இந்தத் தாக்குதல் காரணமாக எவ்விதமான சேதமும் ஏற்படவில்லை.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர்கள் உட்பட 125 பேர் கிறிஸ்தீவில் கைது!

எதென்ஸ் —

இலங்கையர்கள் உள்ளிட்ட 125 சட்டவிரோத குடியேற்றவாசிகளை கிறிஸ் கடலோரக் காவற்படையினர் கைதுசெய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸில் பின்தங்கிய பகுதியான ஏஜியன் தீவின் தென்பகுதியிலேயே இவர்களை கிறிஸ் கடலோரக் காவற்படையினர் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAIR

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...







இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனின் இறுதி நாள் நிகழ்வு நேற்று நடைபெற்றபோது யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உட்பட பலர் கலந்து கொண்டதை முதலாவது படத்திலும், கொல்லப்பட்ட இளைஞனின் தாயார் கதறி அழுவதை இரண்டாவது படத்திலும், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட பொதுமக்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டுவிழா நேற்று நடைபெற்றது

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள அனுசரணையுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான 2005 ஆம் ஆண்டுக்கான தடகள விளையாட்டு விழா நேற்று மாலை 3 மணிக்கு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

விளையாட்டு விழாவின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, யாழ். மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நேற்று முன்தினமும், நேற்றும் இடம்பெற்ற தடகள விளையாட்டுக்கள் மற்றும் கடந்த மாதம் இடம்பெற்ற குழு நிலைப் போட்டி போன்றவற்றின் அடிப்படையில் அனைத்து விளையாட்டுகளுக்குமான மாவட்ட சம்பியனாக 54 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறை பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டதுடன், நல்லூர், கரவெட்டி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்கள் தலா 34 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது நிலைக்குத் தெரிவுசெய்யப்பட்டன.

# வடமராட்சி வலயத்தில் நடைபெற்ற கணித, விஞ்ஞான போட்டி முடிவுகள்!

ஆழியவளை—

(நேற்றைய தொடர்ச்சி)

வடமராட்சிகல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கணித, விஞ்ஞானப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்களை வலயக் கல்வி அலுவலகம் வெளியிட்டுள்ளது.

வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் வருமாறு:-

**தரம் - 9**

1ஆம் இடம்- தெ.பிரணவன் - ஹாட்லிக்கல்லூரி, 2ஆம் இடம்- க.மகிந்தன் - நெல்லியடி ம.ம.வித்தியாலயம், 2ஆம் இடம் - பா.கோகுல் - ஹாட் லிக் கல்லூரி, 2ஆம் இடம் - ஸ்ரீ ரஜீபவன் - ஹாட்லிக் கல்லூரி, 2ஆம் இடம் - ச.விதுரன் - ஹாட்லிக் கல்லூரி.

**தரம் 10**

1 ஆம் இடம் - ச.கோகுல் - ஹாட்லிக்கல்லூரி, 2 ஆம் இடம் - சி.சஞ்செய் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, 3ஆம் இடம் - சி.ராகுலகீதன் - ஹாட்லிக்கல்லூரி, 3ஆம் இடம்- அ.யோன் நிறாஜ் - ஹாட்லிக்கல்லூரி.

**தரம் - 11**

1 ஆம் இடம் - க.வாகீசன் - ஹாட்லிக்கல்லூரி,2 ஆம் இடம் - கு.கசன் - ஹாட்லிக்கல்லூரி, 3ஆம் இடம் - கு.தர்சினி - மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.

**கணிதம்**

**மொழிமூலம் ஆங்கிலம்**

**தரம் - 6**

1ஆம் இடம் - க.கிரிஸ்யாயினி - வட இந்து மகளிர் கல்லூரி,2 ஆம் இடம் - க.ஜனனி - வட இந்து மகளிர் கல்லூரி,3 ஆம் இடம் - த.வினோதன் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

**தரம் - 7**

1 ஆம் இடம் - பு.திலக்ஷி - மெதடிஸ்த பெ.உ.பாடசாலை,2 ஆம் இடம் - கி.செந்தூரன் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி,3 ஆம் இடம் - பா.கபிலன் - ஹாட்லிக்கல்லூரி.

**தரம் - 8**

1 ஆம் இடம் - சு.சுஜீவன் - ஹாட்லிக்கல்லூரி, 2 ஆம் இடம் - க.பிரதீப் - நெல்லியடி ம.ம.வித்தியாலயம்,3 ஆம் இடம் - பா.சண்முகப்பிரியா - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி. (122)

(முற்றும்)

# தென்மராட்சி கல்வி வலய மாணவர்கள் வினாடி வினா போட்டிக்கு விண்ணப்பிக்கவும்

தென்மராட்சி—

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சைவசமயம், வர்த்தகம், விவசாயம் ஆகிய பாடங்களுக்கு வினாடி வினாப் போட்டி நடைபெறவுள்ளது.

தரம் 6 முதல் 13 வரையான மாணவர்களுக்கிடையில் சைவ சமய வினாடி வினாப் போட்டியும், தரம் 10, 11 மாணவர்களுக்கிடையில் விவசாய வினாடி வினாப் போட்டியும், தரம் 10 முதல் 13 வரையான மாணவர்களுக்கிடையில் வர்த்தக வினாடி வினாப் போட்டியும் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்களின் விபரங்களை இந்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தெரிவித்தார். (29)

# கணித, விஞ்ஞானப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் முதலிடம்!



நெல்லியடி—

யாழ்.மாவட்டத்தில் தரம் 9 மாணவர்களிடையே நடத்தப்பட்ட கணித, விஞ்ஞானப் போட்டிகளில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த சாமந்தி சொக்கலிங்கம் முதலாமிடத்தைப்பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். இவர் கரவெட்டி கிழக்கு செங்குந்தா வீதியைச் சேர்ந்தவர்.

இதேவேளை - இந்தப்பாடசாலையைச் சேர்ந்த ஆ. நிதர்சன் இரண்டாமிடத்தைப் பெற்று மாகாண மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். (12)

# மஹோற்சவம்

சாவகச்சேரி—

சாவகச்சேரி - நுணாவில் மணாங் குளப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் நாளை மறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறும்.

18ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (29)

* * * * *

உடுவில்—

சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

17ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், அன்று மாலை 4 மணிக்கு நவ சித்திர ரத பரீட்சார்த்த பவனி விழாவும், மறுநாள் வியாழக்கிழமை சிந்து சித்திரத்தேர் திருவிழாவும், வெள்ளிக் கிழமை சிந்து புஷ்கரணியில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

மாலை திருவூஞ்சல், கொடியிறக்கம் என்பன இடம்பெறும். (101)

# தேசிய வாசிப்பு மாதம்

யாழ்ப்பாணம்—

நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் ஆலோசனைக்கமைய உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் நூலகங்களில் ஒக்டோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாக நடைமுறைப்படுத்தி செயற்படுத்துமாறு சகல உள்ளூராட்சி மன்றங்களையும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோரியுள்ளார். (29)

# சவுதி மன்னர் பஹத்தின் நினைவாக பிரார்த்தனை

யாழ்ப்பாணம்—

சவுதி அரேபிய மன்னர் பஹத்துக்கு யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பெரிய ஜும்மா முகைதீன் பள்ளிவாசலில் நேற்றிரவு 8.45 மணிக்கு ஜனாசா தொழுகையும், பிரார்த்தனையும் நடைபெற்றது.

இந்த நிகழ்வு விருஜி பாஷா முகைதீன் தலைமையில் நடைபெற்றது.


மனோகரா யாழ்ப்பாணம்
இரண்டாவது வெற்றிவாரம்
இலங்கையிலும் இந்தியாவிலும்ஒரேதின வெளியீடு
மாதவன், சதா மற்றும் பலர் நடித்த
பிரியசகி

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு!
ஜெயம்ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த
தாஸ்

காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்னும் சில நாட்கள்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த
சின்னா

காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு!காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
பெப்ரவரி 14

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நிரஞ்சனாஸ் சங்கானை
மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் மற்றும் லதா, நாகேஸ் நடித்த
உரிமைக் குரல்
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 - காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 5.00 (பு.நே)

பலரின் வேண்டுகோளுக்கிணங்க
நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நடாத்தும் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான
முன்னோடிக் கருத்தரங்கு
இடம்:- மு /புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
காலம்:- 08.08.2005 திங்கட்கிழமை
நேரம்:- காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனுசரணை வழங்குவோர்

குமரகுரு புடவை அழகுப் பொருள் வாணிபம்

T.P - 021-228 5971 யாழ்சாலை,கிளிநொச்சி.

# ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்துக்கு தேர்தல்!

## சந்திரிகா திட்டமிடுகிறார்



கொழும்பு

ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பது பற்றி உயர்நீதிமன்றம் தெரிவிக்கும் கருத்து ஜனாதிபதிக்குச் சாதகமாக அமையாதுவிட்டால், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட அவர் தீர்மானித்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நடத்தப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளர் இந்த மாதம் 22 ஆம் திகதி அறிவிக்கத் தயாராவதாகத் தெரியவந்ததையடுத்து, அவ்வாறான அறிவிப்பு வெளியாவதற்கு முன்னதாக உயர்நீதிமன்றத்தின் கருத்தை அறிய ஜனாதிபதி தீர்மானித்திருந்தார்.

அதன்மூலம் தனக்குச் சாதகமான பதில் கிடைத்தால் அது தேர்தல் ஆணையாளரின் அறிவிப்புக்கு ஓரளவு அழுத்தத்தை ஏற்படுத்துமென நம்பியபோதிலும், உயர் நீதிமன்றத்தின் கருத்து தனக்குச் சாதகமாக அமையாவிடின் - நாடாளுமன்றத்தைக் கலைப்பதே அரசியல் ரீதியாக எடுக்கக்கூடிய சிறந்த முடிவென அவர் தனக்கு நெருக்கமான சில பிரதி அமைச்சர்களிடம் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தால் அடுத்த பொதுத்தேர்தலில் பிரதமர் வேட்பாளராக இருக்கப்போவது அனுரா பண்டாரநாயக்கவே. இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ வெறும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட வேண்டிய நிலையே ஏற்படும்.

இந்த ஆண்டுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் அதில் கட்டாயமாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றியீட்டப்போவதாக ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு தெரிவிப்பதாக அவர் தனக்கு நெருக்கமான சில பிரதி அமைச்சர்களிடமும், ஆலோசகர்களிடமும் தெரிவித்தார்.

இந்த நிலையில், பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சியால் தனித்துப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்கவேண்டியேற்படும் என்பதால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சக்தி மிக்க எதிர்க்கட்சி என்ற நிலை கிட்டும் என்பதே அவரின் கணிப்பாகும்.

பொதுத்தேர்தலின் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் ரணில் விக்கிரமசிங்க அதில் வெற்றி பெற்றாலும், அரசியலமைப்பின் பிரகாரம் ஒரு வருடத்துக்கு அரசாங்கத்தைக் கலைக்க முடியாது என்பதால் - பலம்மிக்க எதிர்க்கட்சியுடன் சிறுபான்மை அரசாங்கத்தை அவரால் கொண்டு நடத்துவது சிரமமாக இருக்கும் என்பதே சந்திரிகாவின் கருத்தாகும்.

இந்த அனைத்து விடயங்களையும் ஆராய்ந்த பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானத்தை சந்திரிகா எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் பண்டாரநாயக்க குடும்பத்திலிருந்து நழுவவிருக்கும் அரசியல் அதிகாரத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதற்காகவே பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டிருப்பதாக வேறு சில தகவல்கள் தெரிவித்தன.

இந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ள அவரின் ஆலோசகர்கள், தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களைக் கோருவதற்கு முன்னதாக - நாடாளுமன்றைக் கலைக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அத்துடன், ஜனாதிபதி தனது பதவியை விட்டு விலகவேண்டும். அந்த நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்பார். அப்போது பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதற்கான வாய்ப்பு அவருக்குக் கிட்டாது என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# 60 வீதமான அமைச்சர்கள் ஊழல், மோசடி பேர்வழிகள்!

## பதவி விலகிய பிரதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு

கூட்டணி அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர்களில் 60 சதவீதமானவர்கள் ஊழல் மிக்கவர்கள் என்றும், அதுதொடர்பாக அவதானத்துடன் இருக்குமாறும் பதவியிலிருந்து விலகிய பிரதியமைச்சர் பிறேமலால் ஜெயசேகர ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பிரதியமைச்சர் பதவியிலிருந்தும், நிவித்திகல தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் விலகிய இரத்தினபுரி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எல்.பிரேமலால் ஜயசேகர ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இம்மாதம் 2ஆம் திகதியிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் -

கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்த 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இதுவரை மகாவலி அபிவிருத்தியமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும், அந்த அமைச்சின் அதிகாரிகளும் எந்தவொரு வேலைத் திட்டத்தையும் செயற்படுத்த இடமளிக்கவில்லை.

அத்துடன் - இரத்தினபுரி மாவட்டத்தின் சில அரசியல்வாதிகள் அடிக்கடி நிவித்திகல தேர்தல் தொகுதியின் செயற்பாடுகளில் தலையிட்டு முட்டுக்கட்டைகளைப் போடுவதால் நிவித்திகல தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் விலகுவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், ஏனைய அமைச்சுகளினூடாகவும் இதுவரை மக்களுக்கு எந்தவிதமான சேவையும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

எனக்குப் பணம் சம்பாதிப்பதல்ல நோக்கம். மக்களுக்கு சேவையாற்றுவதே நோக்கம் என்றும் குறிப்பிட்ட பிரேமலால் ஜயசேகர, பெயரளவில் இருக்கும் பிரதியமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்தார்.

## மரணதண்டனைக் கைதிகளை தூக்கிலிடாதது குறித்து நீதிபதிகள் விசனம்!

கொழும்பு

மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகளுக்கு தண்டனை நிறைவேற்றப்படாமை குறித்து மேல்நீதிமன்ற நீதிபதிகள் சிலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மரணதண்டனை நிறைவேற்றப்படாமையால் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஏற்படும் தாக்கங்கள் என்னவென்பது பற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு தெளிவுபடுத்த இந்த மேல்நீதிமன்ற நீதிபதிகள் தீர்மானித்துள்ளனர்.

முழு சமுதாயத்திலும் பரபரப்பை ஏற்படுத்தும் கொடிய படுகொலைகள் நிகழ்கையில் - மரணதண்டனைகள் நிறைவேற்றப்படும் எனக் கூறப்பட்ட போதிலும் சில காலம் சென்ற பின்னர் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுவது பிரச்சினைக்குரியதென கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரோகிணி பெரேரா தெரிவித்தார்.

## தபால் வாக்களிப்புப் படிவங்கள் அச்சிடும் பணிகள் முடிவடைந்தன!

கொழும்பு


எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான படிவங்கள் - சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டு முடிவடைந்துள்ளதாக தேர்தல் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

இதன்படி, தமிழ் மொழியில் 35,000, ஆங்கில மொழியில் 50,000, சிங்கள மொழியில் 2 இலட்சம் தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பப்படிவங்கள் இதுவரை அச்சிடப்பட்டு தேர்தல் திணைக்கள களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அரச ஊழியர்கள் - தபால் மூலம் வாக்களிப்புச் செய்வதற்கான இந்த விண்ணப்பப்படிவங்களில், ஜனாதிபதித் தேர்தல் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## போர்நிறுத்தத்தைப் பேண

# பிரதமர் மகிந்த ராஜபக்ஷ - ரணில் பொதுஉடன்பாட்டுக்கு இணக்கம்!



கொழும்பு

போர்நிறுத்த உடன்பாட்டிலுள்ள குறைபாடுகளை நீக்கி, அதைத் தொடர்ந்து கொண்டு செல்வதென கூட்டுப்பிரகடனம் ஒன்றை வெளியிடுவது சம்பந்தமாக - பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

பிரதமரின் வேண்டுகோளுக்கு அமைய வெளியிடப்படவுள்ள இந்தக் கூட்டுப் பிரகடனத்தில் பிரதான கட்சிகள் இரண்டின் சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்கள் என்ற வகையிலேயே இவ்விருவரும் கைச்சாத்திடவுள்ளனர்.

போர்நிறுத்த உடன்பாட்டைப் பாதுகாத்து, அதனைத் தொடர்ந்து கொண்டு நடத்துவதென்று ஜனாதிபதி வேட்பாளர் இருவரினூடாக பொதுவான பிரகடனம் ஒன்றை வெளியிடச் செய்வதற்கான பணியில் யுத்த எதிர்ப்பு தேசிய முன்னணியின் தலைவர் குமார் ரூபசிங்கவே இருபக்க இணைப்பாளராக செயற்பட்டு வருகிறார்.

பிரதமரினால் விடுவிக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இந்தப் பொதுப்பிரகடனத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக குமார் ரூபசிங்க - எதிர்க்கட்சித் தலைவருடன் மிக நீண்டநேரம் உரையாடினார்.

ஜனாதிபதி வேட்பாளர் இருவரினதும் கையெழுத்துடன் வெளியாகும் இந்தப் பொதுப்பிரகடனம் இன்னும் சில தினங்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சபை முதல்வர் பதவிக்கு நிமால் சிறிபால டி சில்வா!

கொழும்பு

வேலைப்பளு காரணமாக சபை முதல்வர் பதவியிலிருந்து விலகியதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள போதிலும், உண்மையான காரணம் அதுவல்லவென ஆளும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை பிரதமராக நியமிக்க முடியாமற் போனதாலும், அதனால் அதிருப்தியடைந்துள்ள அவரை திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் - மைத்திரிபால சிறிசேனவை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அந்தப் பதவியை நிமால் சிறிபால டி சில்வாவுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

உறுதியளித்தபடி தன்னை பிரதமர் வேட்பாளராக நியமிக்காதது ஏன் என நிமால் சிறிபால டி சில்வா ஜனாதிபதியிடம் வினவியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் அவரைத் திருப்திப்படுத்துவதற்காகவே அவருக்கு சபை முதல்வர் பதவியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## ஊடகவியலாளர்களுக்கு ஓய்வூதியம்; விரைவில் வழங்க அரசு நடவடிக்கை!



கொழும்பு

ஊடகவியலாளருக்கு ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுக்கும் திட்டம் குறித்து ஆராயப்படுவதாக பிரதி ஊடகத்துறை அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையையடுத்தே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார். இதன்படி தனியார் ஊடக நிறுவனங்களில் பணிபுரியும் சுமார் 2 ஆயிரம் நிரந்தர பத்திரிகையாளர்கள் நன்மை பெறுவர் என பிரதியமைச்சர் தெரிவித்தார்.

விரைவில் இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் எனக்குறிப்பிட்ட அவர், ஓய்வூதிய திட்டத்துக்குள் கொண்டு வரப்படும் பத்திரிகையாளர்களுக்கு இலவச காப்புறுதியும் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் கூட்டம்!

கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்களுக்கான கூட்டம் நாளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

ரஜரட்டை அபிவிருத்தி அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன, இந்தக் கூட்டத்துக்கான அழைப்பை விடுத்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது தொகுதி மட்டத்திலான பிரசார செயற்பாடுகள் மற்றும் தேர்தல் குறித்த மக்களுக்கான அறிவுறுத்தல்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விசேடமாக கலந்துரையாடப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## நிதிமோசடியில் ஈடுபட்ட பாதுகாப்பு அதிகாரிகள் கைது

கொழும்பு

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நிதி மோசடிகளில் ஈடுபட்டு வந்த விமான நிலையத்தின் மூன்று பாதுகாப்பு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர்.


இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8.30மணியளவில் இடம்பெற்றதாக சுங்க அதிகாரி அத்துல லங்காதேவ தெரிவித்தார்.

குறித்த பாதுகாப்பு அதிகாரிகள் மூவரும் உல்லாச பயணி ஒருவர் மூலம் சுமார் 3 கோடி ரூபாவை சிங்கப்பூருக்கு அனுப்ப முயற்சித்தபோதே கைது செய்யப்பட்டனர்.

குறித்த பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த மூன்று வருடங்களாக இவ்வாறான நிதி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.

இதேவேளை, பாதுகாப்பு அதிகாரிகள் பயன்படுத்திய வாகனம் ஒன்றும் சுங்கத் துறையினரால் கைப்பற்றப்பட்டது. (01)

# பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில்
# இன்று டிஸ்கவரி பூமிக்கு திரும்பும்!





கேப் கனவெரல்

சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்ற டிஸ்கவரி விண்வெளி ஓடம், அமெரிக்காவிலுள்ள கெனடி விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இன்று தரையிறங்கவுள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதி- அமெரிக்கா ஏவிய டிஸ்கவரி விண்கலம் விண்வெளியில் பூமிக்கு அருகிலுள்ள சர்வதேச விண் வெளி நிலையத்தை 28ஆம் திகதி சென்றடைந்து விண்வெளி நிலையத்துடன் இணைந்தது. விண்வெளி நிலையத்தில் இரண்டு வீரர்கள் தங்கி, ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், தண்ணீர் மற்றும் ஆய்வுக்குத் தேவையான கருவிகளை டிஸ்கவரி எடுத்துச் சென்றது. 15 தொன் நிறையுள்ள பொருட்கள், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு மாற்றப்பட்டன.

டிஸ்கவரி ஏவப்பட்டபோது- அதன் எரிகலனில் இருந்தும், மூக்குப் பகுதியில் இருந்தும் இரண்டு பாகங்கள் கழன்று விழுந்தன. ஓடத்தின் வெப்ப பாதுகாப்பு ஓடுகளை அவை சேதப் படுத்தின.

விண்வெளியில் டிஸ்கவரி இருந்தபோது, அதன் இரண்டு வீரர்களான ஸ்ரீவ் ரொபின்சனும், சொய்ச்சி நகுச்சியும் விண்வெளியில் மூன்று முறை நடந்தனர். மூன்றாவது நடையின்போது, நாசா விஞ்ஞானிகளின் உத்தரவுப்படி டிஸ்கவரியில் ஏற்பட்ட சேதத்தைப் பழுதுபார்த்தனர். பூமிக்கு திரும்பும்போது ஆபத்தை ஏற்படுத்தும் என்று சந்தேகிக்கப்பட்ட சேதமடைந்த பகுதிகள் நீக்கப்பட்டன. இதனால், டிஸ்கவரி பூமிக்குத் திரும்பும் போது விபத்து எதுவும் ஏற்படாது என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

விண்வெளிக்குச் சென்று பணியை முடித்துக் கொண்ட டிஸ்கவரி, 12 நாட்களுக்குப் பின் இன்று பூமிக்குத் திரும்பவுள்ளது. அமெரிக்க புளோரிடா மாகாணத்தில் உள்ள கெனடி விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் அது தரையிறங்கவுள்ளது. அதற்கான ஆயத்தத்தில் டிஸ்கவரியின் ஏழு வீரர்களும் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். விண்வெளி நிலையத்தில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக அதன் வீரர்கள் பயன்படுத்திய குப்பை கூழங்களையும், தேவையற்ற கருவிகள் மற்றும் இதர பொருட்களையும் டிஸ்கவரியில் மூட்டை கட்டிப்போட்டனர்.

தங்களுடன் எட்டு நாட்கள் தங்கியிருந்த டிஸ்கவரி வீரர்கள், விண்வெளி நிலைய வீரர்களான செர்ஜி கிரிகலேவிடமும், ஜோன் பிலிப்பிடமும் விடைபெற்றபின்னர்- அனைவரும் டிஸ்கவரிக்குத் திரும்பினர். விண்வெளி நிலையத்துடன் இணைந்திருந்த ஓடத்தை வெற்றிகரமாகப் பிரித்தனர். நாஸா விஞ்ஞானிகளின் உத்தரவுப்படி, சர்வதேச விண் வெளி நிலையத்தை டிஸ்கவரியில் வீரர்கள் சுற்றி விண்வெளி நிலையத்தை பல்வேறு கோணங்களில் புகைப் படம் எடுத்தனர். விண்வெளி நிலையத்தின் வெளிப்புறத்தில் பாதிப்பு ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்பதைஅறிய, இந்தப் புகைப்படங்கள் பூமிக்கு கொண்டுவரப்பட்டு சோதிக்கப்படவுள்ளன.

பூமியின் சுற்றுவட்டப் பாதையில் டிஸ்கவரி தற்போது சுற்றிவருகிறது. நாஸாவில் இருந்து அனுமதி கிடைத்ததும், கெனடி விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் தரையிறங்கும்.

## மூளை செயலிழந்த பெண் உயிரிழந்தார்



வேஜீனியா

அமெரிக்காவில் மூளை செயலிழந்த நிலையில், குழந்தையொன்றைப் பெற்றெடுத்த பெண் சுசான் ரொறாஸ் (வயது 26) தற்போது இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தை பெற்றெடுத்து இரண்டு நாட்களின் பின்னர் அவருக்கு வழங்கப்பட்டுவந்த செயற்கை முறையிலான உயிர்வாழ்வுத் தொழிற்பாடு வைத்தியர்களால் அகற்றப்பட்டது.

இந்த நிமிடம் இன்பமும், துன்பமும் நிறைந்த நேரமென ரொறஸின் உறவினர் ஒருவர் தெரிவித்தார். ரொறஸுக்காக பிரார்த்தனை செய்தவர்களுக்காகவும், உதவி செய்தவர்களுக்காகவும், நன்றி தெரிவிப்பதாகவும், மனைவியின் நினைவுகள் என்றுமே மறக்கப்படமுடியாததெனவும் ரொறஸின் கணவர் ஜேசன் தெரிவித்தார்.

## அய்மன் அல்-ஜவாக்ரியின் மிரட்டலுக்கு அடிபணிந்து
# ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் தற்போது வாபஸ் பெறப்படமாட்டாது!
## ஜனாதிபதி புஷ் தெரிவிப்பு



வொஷிங்டன்

அல்-கொய்டா தீவிரவாதத் தலைவர் அய்மன் அல்-ஜவாக்ரியின் மிரட்டலுக்கு நாங்கள் அடி பணியமாட்டோம். ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளை இப்போதைக்கு வாபஸ் பெறமாட்டோம், என அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

அல்-கொய்டா அமைப்பின் முக்கிய தலைவர் அய்மன் அல்-ஜவாக்ரி லண்டன் மற்றும் அமெரிக்காவுக்கு மிரட்டல் விடுத்து பேசிய ஒளிப்பதிவு ஒன்று அல்-ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. அந்த ஒளிப் பதிவில், லண்டனில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கு பின்னர் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் எடுத்துள்ள கொள்கை ரீதியான முடிவு, லண்டனை மேலும் அழிவுக்குள்ளாக்கும் என எச்சரித்திருந்தார்.

இது குறித்து அமெரிக்க அதிபர் புஷ் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது-

அல்-கொய்டாவின் முக்கிய தலைவர் அய்மன் அல்-ஜாவாக்ரி விடுத்துள்ள மிரட்டல்கள் மூலம் தீவிரவாதப் போரில் ஈராக் இன்னும் தொடர்பு கொண்டிருப்பது தெளிவாகிறது. ஜவாக்ரி போன்றவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

### உலக நோக்கு


அவர்களுடைய எண்ணங்கள் இருள் படிந்தே இருக்கின்றன. இன்னும் அவர்கள் வெளிச்சத்துக்கு வரவில்லை. ஒரு மிகப்பெரிய நாட்டிற்கு எதிராக, அதுவும் தன்னைத் தானே காத்துக் கொள்ளும் திறன் படைத்த ஒரு நாட்டிற்கு எதிராக அவர் மிரட்டல் விடுகிறார். ஈராக்கில் எங்கள் பணியை முடிக்கும்வரை நாங்கள் அங்கிருந்து படைகளை வாபஸ் பெறமாட்டோம்.

இந்த ஒளிப்பதிவை வெளியிட்டவர் யார் என்பது குறித்து அமெரிக்க அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இந்த ஒளிப்பதிவை வெளியிட்டது ஒசாமாவுக்கு அடுத்த மட்டத்தில் உள்ள ஒரு தலைவர்தானா என்பது குறித்து விரைவில் தெரியும்.

ஜவாக்ரி மற்றும் அவரது ஆதரவாளர்கள் அமெரிக்கப்படைகளை ஈராக்கை விட்டு மட்டுமல்லாமல், மேற்காசிய நாடுகளில் இருந்தே வெளியேற்றவேண்டும் என்று நினைக்கின்றனர். அமெரிக்காவை வெளியேற்றிவிட்டு அவர்களுடைய இருண்ட கொள்கைகளையும், கருத்துக்களையும் மேற்காசிய மக்களிடையே திணிக்க முயன்று வருகின்றனர்.

ஈராக்கியர்கள் சுதந்திரமாக வாழ விரும்புகின்றனர். ஆனால், அய்மன் அல்-ஜவாக்ரி போன்றவர்கள் அவர்களைச் சுதந்திரமாக வாழ விடமாட்டார்கள். ஈராக்கியர்கள் தங்களைக் காத்துக்கொள்ளத் தேவையான பயிற்சியை எடுத்து முடிக்கும் வரை அமெரிக்கப் படைகள் அங்கிருந்து வெளியேறாது. படைகளை வாபஸ் பெறுவதற்கு கால அவகாசம் எதுவும் கூறமுடியாது.' எனினும்-படைகள் விரைவில் ஈராக்கில் இருந்து திரும்பும் எனத் தெரிவித்தார்.

## இங்கிலாந்தின் முன்னாள் வெளியுறவு அமைச்சர்
# ரொபின் ஹூக் நேற்றுமுன்தினம் மாரடைப்பால் மரணமடைந்தார்!




லண்டன்

இங்கிலாந்தின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ரொபின் ஹூக் மாரடைப்பால் மரணமானார். லிவிங்ஸ்டன் தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட இவர்- ரொனி பிளேயரின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தார். சில ஆண்டுகளுக்கு முன்னர் இவருக்கும் பிரதமர் ரொனி பிளேயருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. அமெரிக்காவுடன் இணைந்து ஈராக் மீது இங்கிலாந்து போர் தொடுத்ததை இவர் கடுமையாக எதிர்த்தார். இதனால் இவர் அமைச்சரவையிலிருந்து பதவி விலகினார்.

இருந்தபோதிலும் இவருக்கு இங்கிலாந்து மக்களிடம் அதிகளவு செல்வாக்கு இருந்தது. ரொபின் ஹூக் தனது மனைவியுடன் மலைப்பகுதியில் நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது - திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உடனடியாக ஹெலிகொப்ரர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட போதும் வழியிலேயே மரணமானார்.

## துனீஷிய விமான விபத்தில்
# பதின்மூன்று பேர் மரணம்; 3 பேரைக் காணவில்லை!




துனீஷிய பயணிகள் விமானம் ஒன்று இத்தாலியின் சிசிலி தீவு கடற்பகுதியில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டபோது இடம்பெற்ற விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

இத்தாலியின் தென்பகுதியிலுள்ள பாரி விமான நிலையத்திலிருந்து டியெர்பாவிலுள்ள துனீஷிய சுற்றுலாத் தீவுக்கு சென்றுகொண்டிருந்த விமானமே விபத்துக்குள்ளானது. 39 பயணிகளுடன் சென்ற இந்த விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்த போது- திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. கட்டுப்பாடு இன்றி பறந்து கொண்டிருந்த விமானத்தை விமானி சிசிலித் தீவு அருகே தரையிறக்க முயன்ற போதும் - அது கடலி னுள்வீழ்ந்து மூழ்கி யது. இந்தச் சம்பவத் தில் 13 பயணிகள் உயிரிழந்தனர்.

ஹெலி கொப்ரர்களும், கடலோரப் பாதுகாப்புப் படகுகளும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டன. உயிர் தப்பிய பலர் மூழ்கிய விமானத்தின் சிறகுகளில் ஏறி நின்று- உதவி கோரி கூக்குரல் எழுப்பினர். இதையடுத்து தண்ணீரில் தத்தளித்த 23 பேர் உதவிப் படையினரால் காப்பாற்றப்பட்டனர். இவர்களில் பலர் பலத்த காயங்கள் அடைந்திருப்பதாக தகவல்கள் தெரிவித்தன.

இந்த விமானத்தில் பயணம் செய்த மேலும் மூவர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. பிரான்ஸில் தயாரிக்கப்பட்ட இரட்டை இயந்திரம் கொண்ட டர்போ புரொப் ஏ.ரி.ஆர்-72 ரகத்தைச் சேர்ந்த விமானமே விபத்துக்குள்ளானது. இதில் 72 பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும்.

# ரஷ்ய மினி நீர்மூழ்கிக் கப்பல் பிரிட்டனின் உதவியால் மீட்பு!
## 7 வீரர்களும் பாதுகாப்பாக உள்ளனர்



மொஸ்கோ

கடலுக்கடியில் மூன்று நாட்களாக சிக்கியிருந்த ரஷ்யாவின் மினி நீர்மூழ்கிக் கப்பல் சர்வதேச உதவியுடன் பாதுகாப்பாக மீட்கப்பட்டது.

ரஷ்ய கடற்படைக்குச் சொந்தமான ஏ.எஸ்.22 பிறிஸ் என்ற சிறிய நீர்மூழ்கிக் கப்பல் பசுபிக் பெருங்கடலில் கம்ஸக்கா குடாநாடு அருகே போர் ஒத்திகையில் ஈடுபட்டிருந்தபோது- கடந்த வியாழக்கிழமை கடலுக்கடியில் சிக்கிக்கொண்டது. கடலுக்கடியில் வீசப்பட்டிருந்த மீன்பிடி வலையொன்றில் சிக்கிய நீர்மூழ்கியின் புரொப்லர் செயற்படாததால் - இது நீருள் மூழ்கியது.

இதன் அன்ரனாவும், நங்கூரமும் வலையில் சிக்கிக் கொண்டதால், மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ளமுடியாத நிலை இருந்தது. இதில் பயணம் செய்த 7 ரஷ்ய கடற்படையினரும் உயிருக்குப் போராடும் நிலையில் கடந்த 3 நாட்களாக கடலுக்கடியில் 190 மீற்றர் ஆழத்தில் சிக்கியிருந்தனர்.

இவர்களை மீட்பதற்கு ரஷ்யக் கடற்படையால் முடியாத நிலையில் - சர்வதேச நாடுகளின் உதவி கோரப்பட்டிருந்தது. உடனடியாக அமெரிக்காவும், பிரிட்டனும் தமது மீட்புக் குழுக்களை ரஷ்யாவுக்கு அனுப்பிவைத்திருந்தன. இந்த மீட்புக் குழுக்கள் நேற்றுமுன்தினம் இரவு நடவடிக்கையில் இறக்கப்பட்டன.

பிரிட்டனின் நீருக்கு அடியில் பயணம் செய்யும் ரோபோவின் உதவியுடன் இயக்கப்படும் சுப்பர் ஸ்கோபியோ என்ற கலம் மீன்பிடி வலையில் சிக்கியிருந்த நீர்மூழ்கியை நேற்றுமுன்தினமிரவு பாதுகாப்பாக விடுவித்தது. உடனடியாக ரஷ்ய ராணுவ மருத்துவக் குழுவினர் இந்த நீர்மூழ்கியில் சிக்கியிருந்த 7 கடற்படையினருக்கும் விசேட மருத்துவ உதவிகளை வழங்கி காப்பாற்றினர். குறைந்த வெப்பநிலையும், ஒட்சிசன் பற்றாக்குறையும் மேற்படி வீரர்களை பெரிதும் பாதித்ததாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 2000ஆம் ஆண்டு ரஷ்யாவுக்குச் சொந்தமான அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான குர்ஷ்க் - பரன்ட் கடற்பகுதியில் நீரில் மூழ்கியது. இதனை மீட்க ரஷ்யா இரகசியமாக மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததால்- 118 ரஷ்ய கடற்படையினர் உயிரிழந்தனர்.

பல நாட்களின் பின் ரஷ்யா இந்த நீழ்மூழ்கிக் கப்பலை மீட்க அமெரிக்காவின் உதவியை கோரியிருந்தது. அதன்பின்னர் மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும்- நீர்மூழ்கியிலிருந்த படையினர் எவரையும் காப்பாற்றமுடியாமற்போனது. இது ரஷ்யாவுக்குப் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# தமிழீழத்தின் உற்பத்திப் பொருட்கள் விரைவில் ஏற்றுமதி வாய்ப்பை பெறும்

## கூட்டுறவுதின விழாவில் சிவனேசன் எம்.பி.



சுன்னாகம்—

மீன்பிடி, நெசவு கைத்தொழில், கோழி வளர்ப்பு மற்றும் சிறு கைத்தொழில் மூலம் பெண்கள் பயனடைந்துவருகின்றனர்

இவற்றையெல்லாம் உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்வதென்றால் கூட்டுறவால் மட்டும் தான் முடியும். இந்தக் கூட்டுறவின் எழுச்சி மக்களின் கைகளில் தான் தங்கியிருக்கிறது.

என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் தெரிவித்தார்.

அண்மையில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற 83 ஆவது சர்வதேச கூட்டுறவாளர்தின விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

எங்களுடைய காலத்தில் கூட்டுறவு என்பது பெரிய பிரித்தானியா போன்றது. இந்தக் கூட்டுறவு இப்பொழுது பெரிய இயக்கமாக வளர்ந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

தொழில் அமைப்புகளாக இருந்தாலென்ன, உற்பத்தி அமைப்புகளாக இருந்தாலென்ன, முதல்போடுகின்ற நிறுவனமாக இருந்தால் என்ன எல்லாம் மக்களுக்கும் சேவையாற்றிக்கொண்டு தான் இருக்கின்றன.

இங்கு இருக்கின்ற மாணவர்கள், மக்கள் எல்லோரும் இந்தக் கூட்டுறவுடன் பின்னிப் பிணைந்து இருக்கிறார்கள். கூட்டுறவின் நன்மைகள் பற்றி எல்லா மக்களும் தெரிந்திருப்பதோடு, கூட்டுறவின் வளர்ச்சிக்கும் உதவ வேண்டும்.

வடக்கு - கிழக்கில் நடைபெறுகின்ற போர்ச் சூழலால் கூட கூட்டுறவு நலிவடையவில்லை. தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டே இருக்கிறது. இந்தக் கூட்டுறவின் அமைச்சராக இருப்பவர் இன்றுவரை இதைச் சிந்திக்கவில்லை.

அவர் சிந்திக்கவும் மாட்டார். நாங்கள் எங்கள் தமிழீழத்தில் சொந்த மண்ணில், சொந்தக் காலில் மக்கள் அமைப்பாக நின்று கூட்டுறவாக இணையும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

தேசியத் தலைவரின் கட்டமைப்புக்குள் மக்களும், கூட்டுறவும் இணைந்து செயற்படும் காலம் வெகுதொலைவில் இல்லை. நாம் மிக விரைவில் ஈழத்தில் உற்பத்திகளை வெளிநாடுகளும் அனுப்பி அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய காலம் வந்துகொண்டிருக்கிறது.

கூட்டுறவுப் பணிக்கு நாம் அயராது உழைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (72)

## சமாதானத்தை வலியுறுத்தி நாடகங்கள்

மீசாலை—

தென்மராட்சியின் பல பாகங்களிலும் வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவன அனுசரணையுடன், சமாதானத்தை வலியுறுத்தும் நாடகம் பல்வேறு இடங்களிலும் அரங்கேற்றப்பட்டுவருகிறது.

வெண்புறா நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சியின் பல பாகங்களிலும் இந்த நாடகம் அரங்கேற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரங்களில் கைதடி, மட்டுவில், கச்சாய் பகுதிகளில் இந்த நாடகம் இடம்பெற்றதாகவும் - இந்த நாடகங்கள் தென்மராட்சியில் காணப்படுகின்ற சனசமூக நிலையங்களில் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (25)

# புங்குடுதீவு வைத்தியசாலையில் நடமாடும் மருத்துவ சேவை!

நெடுந்தீவு—

புங்குடுதீவு வைத்தியசாலையில் கடந்த மாதம்முதல் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் வேலணை வைத்திய அதிகாரி ஆ.திருநாவுக்கரசு நடமாடும் வைத்திய சேவையை நடத்தி வருகிறார்.

இதேவேளை, இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் எவரும் நியமிக்கப்படாமையால் அந்தப்பகுதி மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழும் புங்குடுதீவு மக்களால் இந்த வைத்தியசாலைக் கட்டடம் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் திருத்தப்படவுள்ளதாகவும் -

இதற்கு பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அனுமதியளித்துள்ளதாகவும் தெரியவருகிறது. நிரந்தரமாக இந்த வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டால் - புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழும் புங்குடுதீவு மக்கள் அவரது சம்பளத்துக்கு மேலதிகமாக 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கவும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# திருக்குறள் வினாடிவினா இறுதிப்போட்டி நாளை!

புத்தூர்—

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் நிறுவுனர் அமரர் மழவராயர் கந்தையா நினைவாக - யாழ்.மாவட்ட பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவரிடையே நடத்தப்படும் திருக்குறள் வினாடிவினாப் போட்டியின் இறுதிப்போட்டி நாளை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக பேராசிரியர் அ. சண்முகதாசும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா, கல்லூரியின் பழைய மாணவர், ஆவரங்கால் க.சின்னத்துரை ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடக்கவுரையை கல்லூரி அதிபர் வ.ஆறுமுகமும், வாழ்த்துரையை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அதிபர் வ.சிவசிதம்பரம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

மங்கள விளக்கை லயன் அ.க.த.கிருஷ்ணராஜா ஏற்றவுள்ளார். கடந்த புதன்கிழமை இடம்பெற்ற முதலாம்கட்ட போட்டிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பெற்ற புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் இறுதிப்போட்டியில் பங்குகேற்கவுள்ளன.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : ந.கிருத்திகா
முகவரி : யாழ்ப்பாணம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


## வடமராட்சி கிழக்கில்

# 248 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது

ஆழியவளை—

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் கடந்தகால போர் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட 248 குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது.

இதன்படி செம்பியன்பற்று தெற்கு கிராமத்தில் 156 வீடுகளும், மருதங்கேணி தெற்கு கிராமத்தில் 92 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

மேலும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாமுனை கிராம மக்களுக்கு 168 வீடுகளும், தாளையடி கிராம மக்களுக்கு 75 வீடுகளும் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

தலா ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான இந்த வீடுகளை அமைப்பதற்குரிய நிதியுதவியை அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கம் - இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வழங்கியுள்ளது. இதற்குரிய துரித நடவடிக்கைகளில் செஞ்சிலுவைச் சங்க வடமராட்சி கிழக்கு பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். (122)

## மானிப்பாய் சமுர்த்தி வங்கியில் கடன் வழங்கல்

சுதுமலை—

மானிப்பாய் சமுர்த்தி வங்கியினூடாக 50 ஆயிரம் ரூபா கடன் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மானிப்பாய் சமுர்த்தி வங்கியினூடாக இதுவரை சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. (44)

## கலை நிகழ்வு

சுதுமலை—

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஆதரவுடன் கட்டுடை 'ஒற்றுமை சிறுவர் கழகம்' நடத்தும் கலை நிகழ்வு இன்று மாலை 3.30 மணிக்கு கட்டுடை ஒற்றுமை சிறுவர் கழக முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.சமூக செயற்பாட்டு மைய திட்ட ஆலோசகர் மாட்டீனும், சிறப்பு விருந்தினராக யுனிசெப் உதவி சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் செல்வி. து.சர்மிலினியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (44)

# படவரைஞர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டது

கொழும்பு—

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவை வகுப்பு II 'ஆ' இற்கான படவரைஞர் பதவிக்கான வெற்றிங்களை நிரப்புவதற்கு நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் கே.எஸ்.ஆர்.டி.சில்வா விண்ணப்பங்கள் கோரியுள்ளார்.

இந்தப் பதவிக்கான கல்வித் தகைமையாக க.பொ.த. (சா/த) பரீட்சையில் - தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

அத்துடன் அரச தொழில்நுட்ப கல்லூரியொன்றில் படவரைஞர்களுக்கான ஒருவருட கற்கைநெறியையைப் பூர்த்தி செய்திருத்தல்வேண்டும். அல்லது தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பெற்றிருத்தல்வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய முறையில் தயாரித்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் -

நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசன திணைக்களம் இல.238, பௌத்தலோக மாவத்த கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'படவரைஞர்களுக்கான பதவி' எனக் குறிப்பிடல்வேண்டும். இதன் மேலதிக விபரங்களை கடந்த மாதம் 29 ஆம்திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம். (100)

## அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டன

ஆழியவளை—

இந்தமாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகளும், நேர அட்டவணைகளும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதன்படி வினாத்தாள் பகுதி I காலை 9.30 முதல் 10.15 வரைக்கும், பகுதி II காலை 10.45 முதல் 12 மணிவரையும் நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார். (122)




'வேடிக்கை' இருவார இதழ் வெளியீட்டு விழா நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் 'பாதுகாவலன்' ஆசிரியர் சிறப்புப் பிரதியைப் பெறுவதையும், விழாவில் கலந்துகொண்ட 'உதயன்' பிரதம ஆசிரியர் கானமயில்நாதன், 'நமது ஈழநாடு' பிரதம ஆசிரியர் ராதேயன், 'பாதுகாவலன்' ஆசிரியர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை, மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும், விழாவில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

## கலாசாரம்



லவ் ஸ்ரோறிப் படங்கள் பார்த்து ரசித்துக் கொண்ட கதையையும்...

ஆறுதலாயும் விறுவிறுப்பாயும் சுவை யாகவும் கதைத் துக் கொண் டே போனான் ...!! கொடுத் துக் கொண் டே போனான்!! இன்னுமின்னு மாய்... எவ்வளவும் தான் கதையுங்கோ கேட்கின்றேன். தாருங்கோ... வாங்குகின்றேன் என்ற விதமாய், குண்டுசி விழுந்தாலும் தான் சத்தமில்லாத சுபமங்கள அமைதியோடு மன்மதக் கடலில் தங்கள் காதற்தோணியை லாவகமாகச் செலுத்துப் போய்க்கொண்டிருந்தாள்...!!!

நீங்கள் கதைக்கிறதையெல்லாம் கதையுங்கோ!? கொடுக்கிறதையும் வாங்குவதையும் செய்யுங்கோ!!?நான் பாவியும் கதைக்கிறதையும் கேட்கிறேன். கொடுக்கல் வாங்கலையும் அனுபவிக்கி

பூபதி இவ்வளவு ... அவதிப்பட்டு... புதிதாகத் தன் வீட்டுக்கு தொலைபேசி இணைப்பை ஏற்படுத்திக் கொண்டதெல்லாம் தன்னுடைய மகள் ரஜனியை ... அவளுடைய லவ்வர்... ராகுலனோடு கதைத்துக் கொண்டாட விடுவதற்குத்தானென்ற தொல்லையான கதையை...

மதனம் வீட்டாரும் வதனம் வீட்டாரும்... கூடிக்கதைத்து விட்ட நியூஸ்...

புதிதாகத் தன் வீட்டுக்கு தொலைபேசி இணைப்பை ஏற்டுத்திக் கொண்டு சூடாற முன்னமே ... பூபதியிலும் ... தொல்லைபேசியாக வந்து ... தொட்டு இடித்து அவளைப் பெரும் மனத் தொல்லைக்காளாக்கி விடுகின்றது....??

'அம்மா... அப்ப... இவையளும்... ரெலிபோன்... பூட்டினது... தங்கடை பிள்ளையளையும் ... ஒவ்வொரு லவ்வரோடையும்... கதைத்துச் சிரித்து... கொண்டாட... விடுக்கிறதுக்குத் தானே வெண்டு... நீங்களும் ... இந்தக் கதை... அவையளின்ரை... கழுதைக் காதுகளுக்கையும், போய்ச்... சேரக் கூடியதாய்... ஆரோடையும்... கதைச்சு விடுங கோவன்..."

ரஜனியின், வாயிலிருந்து... காதற்சுனாமியாக, வந்து... கொட்டுண்டுவிட்ட, வார்த்தைகளுக்கெல்லாம், ஈடு கொடுக்கமுடியாதவளாய், பூபதி, மகளையும்... வந்த வரத்திலேயே ... தொல்லைப் பேச்சையும், ஒரு கெட்ட, சகுனமாய்க் கொண்டு வந்துவிட்ட, அந்தப் புதிய தொலை பேசியையும், மாறி மாறிப் பார்த்துத் தனக்குள் ஏதேதோ... எலலாம் பேசிக் கொண்டிருந்தாள்...? அலம்பித்தள்ளிக் கொண்டிருந்தாள்...??

இந்தத் ... தொல்லைபேசிக்கதைகளில் ஒரு சின்ன விடயத்தையும், ஒரெப்பனும் தான் தாங்கிப்பழகாத தாய்க்கு விசராக்கிப் போடுமோ... என்றெல்லாம் ரஜனியின் காதல் கோட்டையில்... குண்டெறி... வந்து விழப் போவது போல்... விழுந்து விடுவது போல், தாயைப் போலவே ஒரு சிம்பிளையும் தான். ...

தாங்கும்... மனவலிமையற்ற ரஜனி ஒரு சிந்தனைச் சுனாமியாகிப் போகின்றாள்...?

ரஜனி தொலைபேசியிலிருந்து வாயெடுக்காமல், கையெடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்க இன்னுமின்னுமாய்க் கதைத்துக் கொண்டுதானிருப்பேனென்று சொல்லிச் சொல்லிச் செய்து காட்டுமாற் போல் கதைப்பை நிறுத்தாது தொடர்நது கொண்டுதானிருந்தாள்..!!?

பூபதிக்கும். மதனம் ... பார்த்துக் கொண்டிருக்க சொல்லிச் சொல்லி தொலைபேசித் தொல்லைக் கதைப்புக் கோளாறு ஏறிக்கொண்டே போவது போன்றிருந்தது....??

இந்தத் தருணம் பார்த்துத் தான் வதனமும் பேசிப்பறைந்து பிளான் போட்டு வந்து விட்ட சாம்பிளாய் பதனமாய் மெதுனமாய் வந்து வதனம் குந்தியிருக்கும் வாசற்படியின் மறுபக்கத் தொங்கலில் குந்தியும் விடுகின்றாள். அட்டமியும் நவமியுமாய்...?

இந்த நேரம் பார்த்துத் தான் வாசற்படியிலிருந்து இன்னும் எவ்வளவோ தங்கள் வீட்டுத் தொலைபேசிக்கதைப்புத் தொல்லைகள், பலகாரத்துக்கு மாக் குழைப்பது போலாய்... விடுப்புப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த இரண்டு பெண்மணிகளுக்கு இன்னும் விளக்கமாய், வெளிச்சமாய், காட்டுமாப்போல்

போய் நின்று கொண்டிருந்தாள்...??

அந்தக் கட்டத்திலேதான் நல்லகாலத்துக்கோ ஒரு கெட்ட காலத்துக்கோ மானாவைத் தனது முதல் எழுத்தாய் கொண்ட தனம் தான் நாங்கள் கதைத்து முடித்து விட்ட தொலைபேசித் தொல்லைக் கதைப்பிற்கொரு பத்தியமாகவும் சப்போட்டாகவும்...

'சிநேகிதப் பெடியங்களோடையோ...? என்று கேட்டுவிடாமல்... 'சிநேகிதப் பெட்

## சிறுகதை

டையளோடையே... தங்கச்சி கதைக்கிறா...?' என்ற படியாகவும் கேட்டும் முடித்துவைக்கிறாள்...?

எடியெடி என்ன கதையுது...?

சிநேகிதப் பெட்டையளோடை கதையாமலுக்கு இப்பத்தைய தங்கச்சியவை யாரெல்லாமென்ன சிநேகிதப் பெடியங்களோடையோ பின்னைக் கதைச்சு முடிக்கிறது...? உனக்கு அலகைப் பொத்திக் குடுக்கவேணும்...?'

வானா முதலெழுத்தாய் நாமம் கொண்ட அடுத்த தனமானவள் இப்படி தாங்கள் கதைத்து முடித்துவிட்ட பூபதி வீட்டுப் புதிய தொலைபேசி தொலைபேசிக் கதைப்பற்கு இன்னமின்னுமாய் சப்போட் பண்ணி மெருகூட்டி வலு கெதியாயக் கதைத்து முடித்து அதே வீட்டு வாசற் படியிலிருந்து கெட்டித்தனம் பண்ணி விட்டாற்போல் கூனல் முதுகையும் சற்று நிமிர்த்தி விட்டவளாய் ஒரு வித்தாரவித்தகியாய் இருந்து கொண்டாள்...?

அந்த இரண்டு தனங்களினதும்... தொலைபேசி வயறில் லயிற்று மெரிக்கலாம், குக்கரும் பாவிக்கலாம், ரீ.வியும் பார்ககலாம், பார்த்து விடலாமென்ற விதத் திலான கண்பட்டு வித்தைக் கதைய லங்காரம் கேட்டு...

அந்த அவர்களின் இப்போதையத் தங்கச்சியான ரஜனி சுனாமிக் கெம்பலையும் ஜெயித்து விட்டவள் போல் வேலை செய்து விடவும் தொடங்கிளாள்.

'ஒமோம் அன்ரியவை? நீங்கள் ... சொல்றதெல்லாம் மெத்தச் சரிதான்? அப்படியாரும் இப்பதைக்கு உங்கடை தங்கச்சியவை ஆரும் சிநேகிதப் பெடியங்களோடை அவையளின்ரை லவ்வர்மாரோடை கதைக்கிறதைக் கண்டா கட்டாயமாய் அவையளுக்கும் கதைச்சுக் கொண்டாடுறதுக்கெண்டும் மறந்து போகாமை ஒவ்வொரு ரெலிபோனை வேண்டிக் குடுங்கோவன்...??

இந்த ஊரிலுள்ள அத்தனை தொலை



# வீட்டுக்கு வீடு தொலைபேசிகள்...! மனத்துக்கு மனம் தொல்லைபேசிகள்....?

தையிட்டி அ.இராசதுரை

புதிய தொலைபேசியின் கூப்பிடுகைச் சத்தம் சூறாவளிக்காற்றின் பின்னால் வந்து விட்ட இனிய தென்றலாய் அவளை ஈர்த்து நல்ல சுகத்தைத் தந்துவிட்டது போல் அவளைத்துள்ள வைக்கிறது!!

உயர்ந்த உத்மக் காதலின் இணைப்பாய் புதிய தொலைபேசி இணைப்பிற்காகத் தனது மனமார்ந்த பாராட்டையும், சந்தோஷத் தையும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொண்ட ராகுலன், சுப்பர் ஸ்டாரின் சந்திரமுகி சுப்பர் படம் பார்த்தகதையையும், சிம்பு துஷ்யந், தனுஸ், பரத்

றேன்...!!!???

சந்தோஷத்திலும் கவலையையும் கொண்டாடி முடிக்கிறேன்....

என்று சொல்லாமற் சொல்வது போல், பூபதி, அவர்களின் கதைப்பை அனுபவிக்க முடியாமல் தொங்குபறியில் நின்று அனுபவிப்பது போலாகி நின்று கொண்டிருந்தாள்...??

அந்தச் சந்தர்ப்பத்துக்கு தோதாகத் தான் இந்தத் தொலைபேசித் தொல்லையின் பாத்திரதாரிகளில் ஒருத்தியான மதனம் சருகுச்சத்தம் படாத முறையில் ஒட்டியொட்டி வந்து வீட்டுவாசற்படியில் ஏறிவிட்ட போது தான் பூபதி அந்தக் காட்சி கண்டு இன்னுமெவ்வளவோ தூரத்துக்குப் பயந்து போயும் விடுகின்றாள்...?

இந்தச் சந்தர்ப்பத்திலும் தான் மகள் ரஜனி இன்னும் காதல் விசைகூட்டி அவரகள் பக்கமாகத் தன்முகத்தைத் திருப்பிக்கொண்டு கதைப்பைச் சளைக்காது... கதைத்துக் கொண்டேயிருந்தாள்...!!

இந்தச் சித்திரத்தில் வாசற்படியிலிருந்த இரு அம்மணிகளும் கண்காட்டுப் பட்டுக் கொண்டதை அவதானியாதது போல் அவதானித்துக் கொண்டு... கிரந்தி முத்திப் பௌவுந்திரமாக்கிவிட்ட கதையின் கதைக்கு மேலேயும், அதற்குமேலேயுமே... போய்த்தான் விட்டவளாய் பூபதி தொலைபேசியைக் கட்டிப்பிடிப்பதா....? இல்லை.... மகள் ரஜனியை, தான் ... கட்டிப்பிடித்துக் கொள்வதா...? மானாவை வானாவைக் கட்டிப்பிடிப்பதா...? என்ற எந்தவகை, எதுவகை என்ற ஒரு லையினும் தான் பிடிபடாமல் கிணற்றுமிதியில்

பேசி வயர்கம்பிகளையெல்லாம் ஒன்று திரட்டி அத்தனையினாலும் இத்தனையும் பேசிமுடித்தவர்களுக்குப் போட்டுக் கொடுத்துவிட்டாற்போல ஆழ்ந்த அந்தரங்கமாகவும்... சூடுபறக்கவும் சூடுபிடிக்கவும் கதைக்காமல் கதைத்து முடித்து விட்ட தங்கச்சி ரஜனி.... அடுத்தறைப்பக்கமாய் போயும் விடுகின்றாள்?

அதே வீச்சாக முப்பதென்று எண்ணி முடிக்கும் நேரத்துக்குள்ளாய் தாயும் மகளும் வாசற்படிப் பக்கத்தை எட்டிப் பார்த்தும் விட்டபோது...

இவர்கள் வீட்டு வாசற்படி மாத்திரம் வாசல் படியாகவே இருந்து கொண்டிருந்தது....!!!

தொலைபேசிகள்...?? தொலைந்த பேசிகள்....???

*

# அழகான தேசிய கனிகள் தரும் பாவலர் துரையப்பாபிள்ளையின் 'சிந்தனைச்சோலை'




பாவலர் துரையப்பாபிள்ளையின் 'சிந்தனைச்சோலை' புதிய பதிப்பாக மலர்ந்துள்ளது. எங்கள் புலமை மரபின் உயர் தனி ஆளுமையை இன்றைய தலைமுறைக்குக் கையளிக்கும் இந்த கைங்கரியத்தை. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் உலக பழைய மாணவர் சங்கக் குழுவினர் செய்துள்ளனர். ஒரு பெரும் பண்பாட்டு முது சொத்தை மீள் உயிர்ப்பாக்கிய வெளியீட்டாளர்களுக்கு முதலில் நாம் நன்றி சொல்ல வேண்டும்.

ஈழத்து நவீன இலக்கிய முன்னோடியாக பாவலரின் ஆக்கங்களை பேராசிரியர் கைலாசபதி முதலாய புலமையாளர்கள் ஆராய்ந்து மதிப்பிட்டுள்ளார்கள். மகாகவி பாரதியின் சமகாலத்தவரான பாவலரின் பாடல்களை பாரதி பாடல்களுடன் ஒப்பியல் ஆய்வு செய்யும் முயற்சிகளும் வெளியாகியுள்ளன. இவ்வாறான வரலாற்று ரீதியான முதன்மைகளுக்கு அப்பால். இன்றைய எங்கள் வாழ்வியல் மேம்பாடுவரை - தேசிய எழுச்சியின் அனைத்துப் பரிமாணங்களிலும் வழிகாட்டுகின்ற தன்மையிலே இந்நூலின் கால முக்கியத்துவம் இன்று பெரிதும் உணரப்படும். இந்த வகையில் சிந்தனைச் சோலையில் இடம்பெறும் 'யாழ்ப்பாண சுவதேசக்கும்மி' யின் 332 பாடல்களும் 'எங்கள் தேச நிலை' எனும் கவிதைப்பகுதியும். தனிப்பாடல்களைக் கொண்ட கீதரச மஞ்சரியும் எங்கள் கவனத்திற்குரியன.

'தேசோப காரங் கருதியிக் கும்மியைச்
செப்புகின்றேனாத லாலெவரும்
லேசாய் விளங்க இலகு தமிழில்
இயம்புவதே நலம் சங்கமின்னே'

என தன் கவிதா இலக்கான தேசமேம்பாட்டின் சுட்டும் பாவலர். தன் கருத்துக்களின் தொடர்பாடல் வெற்றியை கருத்திற்கொண்டு எளிமையான கண்ணினாலேயே இந்த பாடல்களை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலக்கியம் ஒரு சமூகக் கலை. சமூகத்து மக்கள் மனங்களை தொடுகின்ற போது தானே அதன் அர்த்தமும் பயன்பாடும்.

'எங்கள் தேசத்தினுக்கேற்ற புதுப்பயிர்
இன்னின்ன என்பதை நன்குணர்ந்து
பங்கமில்லாம லவற்றைச் செய்தால் நற்
பயனுறா தென்பையோ சங்கமின்னே'

என வேளாண் வளம் பெருக்க வழி சொன்ன பாவலர்.

'எத்தனையோ பெயர் மிக்க வறுமையில்
என்றும் வருந்தி விழித்தாலும்
உத்தியோகமல்ல தொன்றுஞ் செய்யாமல்
உலைந்து திரிகிறார் சங்கமின்னே'

என இன்றுவரை நீளும் எங்கள் தலைமுறையினரின் White Colour வெள்ளைச்சட்டை உத்தியோக மோகத்தை சுட்டி நிற்பார்.

'பார்க்கப் பளீரென் நிலங்கும் போலிப் பொருள்
பற்பல வாயீங் கனுப்பிப் பணம்
தீர்க்கமாய்ச் சேகரிக்கும் பிறர் புத்தியைச்
சிந்தனை செய்யடி சங்கமின்னே'

எனவரும் பாடலடிகளில் A9 பாதை திறப்பின் பின்னான யாழ்ப்பாண விவரணத்திலிருந்து. இன்றைய உலகமயமாக்க அலைகளின் விளைவான நுகர்வியம் (Wnsu mansn)பற்றிய சிந்தனைகளையும் ஆழ உணரமுடியும்.

இன்றைய எங்கள் புனர் வாழ்வு. புனர் நிர்மாண களங்களிலும். உலக புலங்களின் சமுதாய மேம்பாட்டு திட்டங்களிடையேயும் கேட்கின்ற ஒரு மந்திரச் சொல் - மக்கள் பங்கேற்புः கூட்டுறவு.

'ஓர் வரிருவர் செய்யக்கூடா வேலையை
ஒன்றாய் பலர் கூடிச் செய்திடுங்கால்....!
சீர்வதியும் பலன் மிக்க வுண்டென'

கூட்டுமுயற்சி பற்றிய தன் பாடல்களிடையே தெளிவுபடுத்துவார் பாவலர்.

பாவலரின் கல்வி பற்றிய சிந்தனை என்ன அழகாக அறிவுறுத்தப்படுகின்றது.

'காசுழைக்க மட்டும் கல்வியா' என வினாவெழுப்பும் பாவலர். 'பூரண அறிவை தேடாத கல்வி' புன்நெறியன்றோ எனப்படுகின்ற ஆதங்கத்துக்கு. இன்றுவரை அர்த்தம் உண்டல்லோ.

'சிங்களரோடு பறங்கியாம் வாலிபர்
தேற அனந்தம் வசதியுற
எங்களின் வாலிபர்க்கோ வவரைப் போல
இல்லை வசதிகள் சங்கமின்னே'

என சென்ற நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் ஒங்கிய பாவலர் நிலைமை இந்த நூற்றாண்டின் முதல் தசாப்தத்து எங்கள் ஏக்கங்களுடனும் இசைந்திடுதலைக் காணலாம்.

இவ்வாறே எங்கள் தாய் மொழியான் தமிழைத் தள்ளி. 'இங்கிலிஷ் தன்னையே கற்பது துக்கமல்லோ' எனக் கேட்டுப் பாவலர்.

'செந்தமிழும் வேனும் இங்கிலீசும் வேனும்
சேர்த்திவ்விரண்டையுமோர் பவரே
புந்தி விரிந்து மகிழ்வர் தற்காலத்தில்'

என விரிந்த. தெளிந்த யுத்தியை புகட்டி நிற்பார்.

'எங்கள் பிள்ளைகளின் பெயர்கள் தமிழில் அமையாது போனால் சங்காக யீனமன்றோ'

*'எங்கள் சுதேச வைத்தியத்தை அழிய விடலாமோ
*எங்கள் சுதேச உடைகளை விட்டு அந்நியராவோமோ'
*'வீட்டுக்கொரு சாதியாய் ஊரில் பிரிந்தால்
ஐக்கியம் சந்தோஷம் சேர்வதெங்ஙனம்'
*'மிக்க பெருந்தொகைச் சீதனமில்லாது
மேதினியில் மண வாழ்விலராய்த்
துக்கமுறும் பெண்கள் யாழ்ப்பாண நாட்டிற்
தொகையாய் இருக்கிறார் சங்கமின்னே'
*'தம்பொருள் தஞ்சுகம் தங்கலை தந்தனம்
தண்ணளியாய்ச் சுய தேசநன்மைக்
கிம்பரில் விட்டிட நன் மனங்கொள்ளாதார்
என்னபிமானிகள் சங்கமின்னே'

என்றில்லாதவாறு நீளும் பாவலரின் ஆதங்கங்கள் அத்தனையும் இன்றுவரை எங்களின் பண்பாட்டு விழிப்புணர்வுக்கான மையங்கள் அல்லவா....

'எங்கள் சுதேசம் எனும் மாதா - எங்கள்
இனிய அரிய மகத்துவ மாதா
மங்கள மாம் யாழ்ப்பாண மாதா - முழு
மனதா லுனைத் துதித்தோம் ஆசிதாதா'

என்பது பாவலரின் சுதேசம் (நாடும். அரசும்) எனும் தலைப்பிலான கவிதைகளின் தொடக்கமாய் அமைவது.

"வடக்கு. கிழக்கு. வடமேற்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களை ஆரியவேந்தர் சிறிது காலம் ஒன்றிணைந்து ஆண்டனர். இந்த வரலாற்று அடிப்படையிலேயே ஈழத்தமிழரை ஒரே நாட்டினராக பாவலர் கருதினார். இதுவே யாழ்ப்பாண நாடு எனக் கருதப்பட்டது. இதனையே பாவலர் 'யாழ்ப்பாண சுயதேசம்' என்கிறார்.

பாவலரிடையே ஈழத்தமிழ்த் தேசியத்தின் மூல வேர்களை பதிப்பாசிரியர் இனங்காட்டுகின்றமை எம் கவனத்திற்குரியதாகும்.


இங்குதான் சிந்தனைச்சோலையின் மீள் வாசிப்பின் அவசியமும். பயன்பாடும் மையமிடுகின்றன. எங்கள் சுவதேசத்தின் நிர்மாணத்தில். நிர்ணயத்தில் பாவலர் துரையப்பாபிள்ளையின் சிந்தனைச் சோலை பெரு நிழலாக பயன் கனிகளைத் தருவது என்பது உண்மை. வெறும் புகழ்ச்சியல்ல.

**பேராசிரியர் என்.சண்முகலிங்கன்.**

---

# இசையின் தேடலில் ஆறுதல் கொண்டுவரும் மனம்

இசையின் ஆர்வமும் அதன் ஈடுபாடும் ஒரு மனிதனை பூரணமாக்குகின்றது. அதாவது, முழுமையடையச் செய்கின்றது. புலம் பெயர்ந்த வாழ்வு வெளிநாடுகளில் இருந்தாலும், தங்களது துறைகளில் முன்னேறிச் செல்கின்றார்கள் என்பதைப் பார்கின்றபோது எமது கலாச்சாரம் எங்கு சென்றாலும் நிலைநாட்டப்படுகின்றது என்பதை சொந்த மண்ணிலே தமது வாத்திய அரங்கேற்றங்களை நிகழ்த்த வருகின்ற போது பெருமை கொள்ள முடிகிறது.



லண்டனில் பிறந்து, லண்டனில் மிருதங்க கலா வித்தகர் பரமசாமி கிருபாகரன் அவர்களின் மாணவனாகிய யதீசன் செல்வகுமாரின் (வயது14) மிருதங்க அரங்கேற்றும்கொறண்டபாணி மாஸ்டரின் மாணவிகளான கிருபானந்தன் ரம்மியா (வயது 19), கிருபானந்தன் சிந்துஜா (வயது 17) ஆகியோரின் வயலின் அரங்கேற்றமும் கடந்த சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் ஆதின கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த அரங்கேற்ற நிகழ்வில் பங்கு கொண்ட பிள்ளைகளின், பெற்றோர்கள் கூறும் போது -

லண்டனில் பிறந்து வளர்ந்து கல்வி கற்றுக் கொண்டிருந்தும் எமது கலாசாரத்தை பின்பற்றி இசைத்துறையில் முன்னேற வேண்டுமென்று எமது பிள்ளைகளை இசைத்துறைப்பக்கம் அவர்களை ஈடுபடவைத்து விட அவர்களாகவே இந்தத் துறையில் ஆர்வம் காட்டி திறமையாகப் பயின்று வந்ததை காணக்கூடியதாக இருந்ததால், மேலும் மேலும் முன்னேறுவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களுக்கு எந்த இடையூறுகளும் இல்லாமல் அனுமதி கொடுத்து வந்தோம்.

லண்டனில் இசைத்துறைக்கு கூடுதலான வரவேற்பு இருக்கின்ற படியால், அரங்கேற்ற நிகழ்வுகளைப் பார்த்தும் தாங்களும் இசைத்துறையில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணம் கொண்டார்கள். அதற்கமைய எங்களுக்கும் இசைத்துறையில் ஈடுபாடு உள்ளதால் நாங்களும் விருப்பம் கொண்டு அனுமதி கொடுத்தோம்.

அடுத்த படியாக லண்டனில் கூடுதலான சுதந்திரம் இருக்கிற படியால் பிள்ளைகள் எங்கட கலாசாரத்தில் இருந்து தவறி, அந்த நாட்டு கலாசாரத்தில் விழுந்து விடுவார்களோ என்ற பயமும் இருக்கிறது. இதனால் பிள்ளைகளை இப்படிப்பட்ட துறைகளில் ஈடுபட விடுகிறபோது விடுமுறை நேரங்களில் வீணாகிப் போய்விட மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இசைத்துறையில் 7,8 வருடங்களாக பழகி வருகின்றார்கள். லண்டனில் பல அரங்கேற்றங்களை நடத்தி பரிசுகளும் பெற்றுள்ளார்கள்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் நிறையப்பேர் இசைத்துறையில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். அவர்களும் தமது சொந்த மண்ணில் அரங்கேற்றங்களைச் செய்வதற்காக இருக்கிறார்கள். அடுத்த அடுத்த மாதங்களில் இனிமேல் நிறைய அரங்கேற்றங்கள் இங்கு நிகழப்போகிறது. இதனைப் பார்க்கின்ற போதுதான் இசைத்துறை எமது மக்களிடையே மேலும் மேலும் வளர்ந்து வருகின்ற சூழல் அமைகின்றதைப் பார்க்கின்ற போது சந்தோஷமாக இருக்கிறது.

எந்த மொழியில் அமைந்த பாடல்கள் என்றாலும் அந்தப் பாடலின் கருத்தை நன்கு அறிந்து வாத்தியங்களை வாசிக்கின்ற போது தான் இசையின் ஆழம் தெரியும். துக்கமாக இருந்தாலும், சந்தோஷமாக இருந்தாலும் அதற்கேற்ப உணர்ந்து



ஒரு கலைஞன் தன்னை மாற்றிக்கொண்டு வாசிக்கின்ற பக்குவம் ஏற்படுகின்ற போதுதான் நல்ல கலைஞன் ஆகின்றான்.

எந்தப் பிரச்சினையென்றாலும் இசையைக் கேட்கின்ற போது, மீட்டுகின்றபோதும் ஒரு ஆறுதல் எங்கள் மனதிற்குள் ஏற்படுகிறது. ஆகவே இசையின் வலிமை எமது உணர்வுகளின் நரம்புகளில் சீரான ஒரு இரத்த ஓட்டத்தில் அமைதியையும் மனதிற்குள் உண்டு பண்ணிவிடுகின்ற போது இந்த அனுபவங்கள் பெற்றோராகிய எங்களுக்கும் தெரிகின்ற போதுதான் இந்தத்துறையில் பிள்ளைகளையும் ஈடுபடுத்தி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

**– செல்வா**

# இராசன் கடலுணவு வாணிபத்தினரால் கடற்தொழிலாளருக்கு உபகரணங்கள்



கிளிநொச்சி—

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு இளவேனில் நிறுவனத்தினரின், இராசன் கடலுணவு வாணிபத்தினரால் நேற்றுமுன்தினம் கடனடிப் படையில் கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. தமிழீழ வைப்பகத்தின் உறுதுணையுடன் காலை 11.00 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முதன்மைச் சுடரேற்றலைத் தொடர்ந்து - தமிழிழ தேசியக் கொடியை இளவேனில் வாணிபப் பணிப்பாளர் பூ.யாழவன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை - நிதித்துறை வணிக ஒன்றியத் தலைவர் சொ.வெற்றியரசன், தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் கா.பாலகிருஸ்ணன், தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் மா.வீரத்தேவன் ஆகியோர் நிகழ்த்தினர்.

கடற்தொழிலாளர்களுக்கான உபகரணங்களை நிதித்துறை மனிதவள மேம்பாட்டுப் பகுதிப் பொறுப்பாளர் சி.அன்புச்செல்வன், நிதித்துறையின் கணக்காய்வுப் பகுதிப் பெறுப்பாளர் வேலவன் ஆகியோர் வழங்கினர்.

ஒரு கோடி ரூபா கடன் திட்டத்தில் 40 லட்சம் ரூபா கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடற்தொழிலாளர்களின் நலன் கருதி 1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இராசன் கடலுணவு வாணிபம், போர்நெருக்கடியான காலப்பகுதிகளில் கடற்தொழிலாளர்களின் தொழில் மேம்பாட்டுக்கான பல பணிகளையாற்றியுள்ளது.

கடற்தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புகளையும் வழங்கியுள்ளதோடு, 1999 ஆம் ஆண்டு தொடக்கம் கடற் தொழிலாளர்களுக்குப் பல கடன் உதவிகளையும் வழங்கி வருகிறது.

2000 ஆம் ஆண்டில் மட்டும் 3கோடிரூபாவுக்கு மேலான கடனுதவிகள் வழங்கப்பட்டன.

போர் இடம்பெற்ற காலங்களில் ஐஸ் தொழிற்சாலை இன்றிப் பெருமளவு கடலுணவுகள் பழுதடையும் நிலையைக் கருத்தில் கொண்டு, முல்லைத்தீவில் ஐஸ் தொழிற்சாலையொன்றை இயக்கி வருகிறது.

2004 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக, கடலுணவு வாணிபத்தின் 11 பணியாளர்கள் உயிரிழந்தனர். அத்துடன் கடனாக வழங்கிய 2 கோடி ரூபா மீளப்பெற முடியவில்லை. சுனாமிக் கடல் அனர்த்தத்தின் போது 1 கோடி ரூபா சொத்தழிவு ஏற்பட்டது.

தற்போது கடற்தொழிலாளர்களின் தொழில் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கும், கடனுதவிகளை வழங்குவதற்கும் கிளிநொச்சியில் இராசன் கடலுணவு வாணிபத்தின் பணிமனையொன்று செயற்பட்டுவருகிறது.

போரினாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் தொழில் மேம்பாட்டை உயர்த்தும் நோக்குடன், தமிழிழ வைப்பகத்தின் உதவியுடன் இளவேனில் நிறுவனத்தின் இராசன் வாணிபத்தினர் இன்றும் தமது கடனுதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மருதங்கேணி பொதுச்சந்தையை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு!

ஆழியவளை—

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணிப் பொதுச்சந்தை விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

இந்தப் பொதுச் சந்தையைப் புனரமைப்பதற்கு வடக்கு - கிழக்கு மாகாணசபையால் பருத்தித்துறைப் பிரதேசசபையின் செம்பியன்பற்று உப அலுவலகத்துக்கு 70 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தித் திட்டப் பிரிவினர் இதைப் புனரமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் பிரதான சந்தையாக விளங்கும் இந்த மருதங்கேணி பொதுச் சந்தை - கடந்த கால போர் நடவடிக்கை காரணமாகப் பெரும் பாதிப்படைந்த நிலையிலேயே காணப்படுகிறது. (122)

# மாணவர்கள் இடை நிறுத்தம்

வவுனியா—

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விடுமுறை விடுவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் மாணவர்கள் மூவர் - மது அருந்தி விட்டு கல்லூரி உடமைகளை சேதமாக்கியுள்ளனர். இதனால் அந்த மாணவர்களைக் கல்லூரி நிர்வாகம் இடைநிறுத்தியுள்ளது.

இந்த மாணவர்களில் ஒருவர் இரண்டாம் ஆண்டு மாணவர், மற்றைய இருவரும் முதலாம் ஆண்டு மாணவர்களாவர். (03)

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஆகஸ்ட் -08

1576 : முதலாவது விண்வெளி ஆய்வுகூடம் டென்மார்க்கின் யூரானிபோர்க் என்ற இடத்தில் டைகோ பிரஹி என்ற வானியலாளரால் உருவாக்கப்பட்டது.

1786 : ஐரோப்பாவிலேயே மிக உயர்ந்த சிகரமான மான்ட் பிளாங் சிகரத்தை முதன்முதலாக மைக்கேல் கலோனியல் பிக்கார்ட் என்பவரும் அவரது வழிகாட்டியான ஜாக்யூஸ் போல்மாட் என்பவரும் சென்ற டைந்தனர்.

1892 : அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் சுவாமி விவேகானந்தர் உரையாற்றினார்.

1980 : முதன் முதலாக டெனிஸ் போட்டிகளில் டேவிஸ் போப்பைப் பரிசு அறிமுகம் செய்யப்பட்டது. அமெரிக்காவில் புரூக்லினில் நடந்த டெனிஸ் போட்டியில் முதலாவது டேவிஸ்கோப்பைப் அமெரிக்கக் குழு தட்டிச் சென்றது.

1942 : இந்தியாவில் காங்கிரஸ் மாநாட்டில் 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டத்தில் காந்தி இரண்டு மணி நேரம் உரையாற்றினார்.

1943 : இந்தியத் தேசியப் படையின் தலைவராக சுபாஸ் சந்திரபோஸ் பொறுப்பேற்றார்.

1955 : அணு ஆற்றலை சமாதான முறையில் மனிதகுல முன்னேற்றத்துக்குப் பயன்படுத்துவது பற்றிய மாநாடு ஜெனிவாவில் நடைபெற்றது.

1965 : புகழ் பெற்ற அமெரிக்க நாவலாசிரியையும், சிறுகதைஎழுத்தாளருமான ஷிர்லி ஜக்ஸன் மரணமடைந்தார்.

1977 : எதியோப்பியாவில் எல்லைப்புற நகரங்கள்மீது தாக்குதல் நடத்திய சோமாலியா ஓகாடென் என்ற எல்லைப்பகுதியைக் கைப்பற்றியது.

1978 : வெள்ளிக் கிரகத்தின் வளிக்கோள ஆய்வுக்காக 'பயனீர் வீனஸ் - 2' என்ற விண்கலம் ஏவப்பட்டது.

1983 : குவாட்டமாலாவில் இராணுவப் புரட்சி நடைபெற்றது. ஜனாதிபதி எஃப் ரெயின் ரியோன்ஸ் மோட் பதவியில் இருந்து துரத்தப்பட்டு, பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் ஜனாதிபதியாக்கப்பட்டார்.

1989 : கொலம்பியா எஸ்.டி.எஸ் - 28 என்ற விண்வெளி ஓடம் ஐந்து வீரர்களுடன் ஏவப்பட்டது.

1992 : அராலித்துறையில் இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் வடபிராந்திய இராணுவத் தளபதியான லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட சிரேஷ்ட இராணுவ கடற்படை எண்மர் மரணமடைந்தனர்.

1998 : பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் இலங்கைப் பொலிஸாருக்கு அமெரிக்கா பயிற்சிகளை வழங்க ஆரம்பித்தது.

2000 : கடந்த 3 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த புதிய அரசியல் சட்ட நகலை - அரசு வாபஸ் பெற்றது.

தொகுப்பு - சந்துரு

# செல்வபுரம் கிராம விவசாய அமைப்பினரின் நிர்வாகிகள் தெரிவும் - கலந்துரையாடலும்

முல்லைத்தீவு—

பாண்டியன்குளம் பிரதேசத்தில், செல்வபுரம் கிராம விவசாய அமைப்பின் நிர்வாகிகள் சந்திப்பு இடம் பெற்றது.

இந்த நிகழ்வு கடந்த புதன் கிழமை காலை 10 மணிக்கு செல்வபுரம் கிராம அபிவிருத்தி மண்டபத்தில், பாண்டியன் குளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதிப் பொறுப்பாளர் கலைவாணன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியகத் திட்டமிடல் அலுவலர் கி.ஆறுமுகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் வே. தயாபரம், பாண்டியன் குளப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உற்பத்தியாளர்கள் தற்போதைய சூழ்நிலையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதிப் பொறுப்பாளர் கலைவாணன் கருத்துத் தெரிவிக்கையில் -

உற்பத்தியாளர்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றார்கள். குறிப்பாகத் தற்போது நெல் சந்தைப்படுத்தலில் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருவது தெரிகிறது. இதற்காக அனைவரும் ஒன்று சேர்ந்து தீர்வுகான வேண்டும்.

இதற்கு விவசாய அமைப்பினர் பலமாக இருக்கவேண்டுமென அவர் தெரிவித்தார். விவசாய அமைப்பாளரின் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக கி.ஆறு முகம் கருத்துத் தெரிவிக்கையில் -

தற்போது கமக்கார அமைப்புகளை புனரமைப்புச் செய்து, நிர்வாகிகளைத் தெரிவு செய்து, அவர்கள் மூலம் விவசாய அமைப்புகள் சார்ந்த நடவடிக்கைகளைப் பலப்படுத்தி வருகிறோம். இந்த வகையில் செல்வபுரம் விவசாய அமைப்பு - புனரமைப்பு மேற்கொள்ளப்படும் இவர்களின் நடவடிக்கைகளை மேம்படுத்த இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து விவசாய அமைப்பின் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக ஆ.சந்திரகாந்தனும், செயலாளராக மு.இராசேந்திரமும், பொருளாளராக எஸ்.செந்தூரனும், ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பெருமளவு விவசாயிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நவோதய பாடசாலை திட்டத்தை வன்னியிலும் ஆரம்பிக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள்

மன்னார் —

வன்னித் தேர்தல் தொகுதியில் நவோதய பாடசாலைத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்- மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2004 ஆம் ஆண்டிலிருந்து இது தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு வந்த போதும், அது நிறைவேற்றப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தினர்.

மன்னார் ஜோசப்வாஸ் மத்திய வித்தியாலயம், பெரிய பண்டிவிரிச்சான் ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம், முருங்கன் மகா மத்திய வித்தியாலயம், உயிலங்குளம் ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம், முருங்கன் சிவநகர் தமிழ் வித்தியாலயம், முள்ளியவளை ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம், பாலிநகர் மகா மத்திய வித்தியாலயம், முத்தையன் கட்டு வலதுகரை தமிழ் வித்தியாலயம், மல்லாவி மகா மத்திய வித்தியாலயம் ஆகியவற்றுக்கே இந்தத் திட்டத்தை அமுல் செய்யுமாறு அவர் கேட்டுள்ளார்.

# ஆழியவளை சீ.சீ.த.க பாடசாலை புனரமைப்புக்கு 7கோடி ரூபா ஒதுக்கீடு

ஆழியவளை—


சுனாமி அனர்த்தத்தால் முற்றாகச் சேதமடைந்த ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தைப் புனரமைப்பதற்கு ஜப்பானின் ஜெய்கா நிறுவனம் 7 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தப் பாடசாலையை புதிய இடத்தில் அமைப்பதற்கான காணியின் வரைபடம் ஏற்கனவே ஜெய்கா நிறுவனத்தினருக்கு வலயக் கல்விப் பணிப்பாளரால் அனுப்பிவைக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை ஜெய்கா நிறுவனத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா சகிதம் பாடசாலை அமைப்பதற்கான புதிய காணியைப் பார்வையிட்டதுடன், கட்டடங்கள் அமைப்பது பற்றியும் கலந்துரையாடினார்.

இந்தப் பாடசாலை சகல பௌதீக வளங்களும் கொண்ட பாடசாலையாக அமைக்கப்படவுள்ளதாக பாடசாலை அதிபரிடம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுனாமி அனர்த்தத்தால் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த 33 மாணவர்கள் பலியாகியுள்ளனர். பாடசாலை முற்றாகச் சேதமடைந்து தற்போது தற்காலிக கொட்டகையில் இயங்கிவருகிறது. (122)



இதுவரை காலமும் புனரமைக்கப்படாமல் அழிவடைந்துள்ள முல்லைத்தீவு அரச செயலகத்தைப் படத்தில் காணலாம்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

உங்கள் செயல்திறனை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டுமா? உங்களைவிடச் சிறந்தவருடன் இணைந்துகொள்ளுங்கள்

*- தியபோ*

## நமது நோக்கு

# தமிழ்மக்கள் இனியும் ஏமாறப்போவதில்லை

போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டு மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட, அந்த உடன்பாட்டின் முக்கிய பல அம்சங்களை, ஆளும் தரப்பினர் ஒப்புக்கொண்டதன் பிரகாரம் நடைமுறைப்படுத்தத் தவறியுள்ள அதே சமயம் - அந்த உடன்பாட்டை மீறும் பல நடவடிக்கைகளில் அரசும், படைத்தரப்பினரும் தொடர்ந்து ஈடுபட்டு வருவதன் காரணமாக சமாதான முயற்சிகள் நகர்வற்ற ஒரு நிலைக்கு வந்துள்ளதுடன், அம்முயற்சிகள் மீதான சமாதானத்தை வலியுறுத்தும், முன்னெடுக்கும் சகல தரப்பினரதும் நம்பிக்கைகள் முற்றாக சிதைவடையும் ஆபத்து நிலையையும் எட்டியுள்ளது.

அத்துடன், இலங்கையில் இப்போது நிலவும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலையும், அரசியல் அல்லது அதிகார மாற்றங்கள் ஏற்படுவதற்கரன தேர்தல் சூழலும், அதிகார மேலோர் வட்டத்தினரை சமாதான முயற்சிகளிலிருந்து மெல்ல மெல்ல வெகுதூரத்திற்குத் தள்ளிச்செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தியுள்ளதால், அவர்களால் இது தொடர்பாக இப்போதைக்கு எந்தவொரு தீர்க்கமான முடிவையும் எடுக்க முடியாமல், எல்லாவற்றையும் காலங்கடத்தி இழுத்தடிக்கும், அரசியல் லாபங்களை எட்டுவதற்கான உள்நோக்குடனேயே அணுகவைத்தும் வருகிறது என்பதே இன்றைய யதார்த்தமுமாகும்.

யார் என்ன சொன்னாலும், எப்படியான அழுத்தங்களை ஏற்படுத்தினாலும், தென்பகுதி அரசியல் கட்சித் தலைமைகளில் பிரதானமானவர்கள் அனைவருமே, அவர்கள் ஆளும் கட்சியை அல்லது எதிர்க்கட்சியைச் சேர்ந்த எவராக இருந்தாலும், சமாதான முயற்சிகள், பொதுக்கட்டமைப்பு போன்ற இனப்பிரச்சினையுடன் தொடர்பான சகல விடயங்களையும் தேசிய நலன்குறித்த நோக்கிலல்லாது, தத்தமது தேர்தல் நலன் குறித்த நோக்கிலேயே அணுகுவார்கள் என்பதை விபரிக்க வேண்டிய அவசியமே இல்லை.

சர்ச்சைக்குரிய மேற்குறிப்பிட்ட வடயங்களே, தேர்தல் களத்தில் எதிரியை வீழ்த்துவதற்கான - வியூகங்களை அமைப்பதற்கான - மூலோபாய ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படப் போகின்றன என்பது தெளிவாகும்.

ஜே.வி.பியினரும், ஹெல உறுமயவினரும் சமாதானப் பேச்சுக்களில் நோர்வேயின் அனுசரணை - பொதுக்கட்டமைப்பில் புலிகளது பங்கு ஆகியவற்றையே தமது இனவாத அரசியலுக்கான பிரசாரக் கருப்பொருட்களாகக் கையாளப்போகின்றன. இதனை அவர்கள் வெளிப்படையாகவே கூறிவருகிறார்கள். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அடிப்படையிலான ஒற்றையாட்சியை வலியுறுத்தும் சமாதான விரோத கொள்கைகளின் அடிப்படையிலான இவர்களின் அரசியலை முறியடிக்க - இன்றைய ஆளும் கட்சியும், பிரதான எதிர்க்கட்சியும் இதனைவிட மோசமாக இனவாதம் பேசவேண்டிய அவசியம் உண்டு.

அவர்கள் சமாதானம் குறித்து தேர்தல் மேடைகளில் பேசினாலும்கூட, அதனை ராஜதந்திர ரீதியில் மிக நுட்பமாகவே அணுக விரும்புவார்கள் என்பது நிஜம். எனவே, தேர்தலுக்கு முன்னர் இது குறித்து எதனையும் இறுக்கமாக வலியுறுத்தவோ, தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கவோ இவர்களால் முடியவே முடியாது. அது எல்லாவகையிலும் தங்களின் தேர்தல் நோக்கங்களைப் பாதித்துவிடும் என்பதில் அவர்கள் எச்சரிக்கையாகவே உள்ளனர்.

எனவே, வரப்போகும் ஜனாதிபதித் தேர்தல், அல்லது வரக்கூடிய சாத்தியம் இருப்பதாகக் கூறப்படும் பொதுத்தேர்தல் ஆகியவற்றிற்கு முன்னர் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுமென்றோ, பொதுக்கட்டமைப்பு இயங்கத்தொடங்குமென்றோ அல்லது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளையும், அபிலாஷைகளையும், கோரிக்கைகளையும் நியாயபூர்வமாக அணுகும் எந்தவொரு நடவடிக்கைகளையும் எவரும் மேற்கொள்ளப்போவது சாத்தியமேயில்லை.

வெறுமனே தமிழ் மக்களையும், சர்வதேச சமூகத்தையும் பேய்க்காட்டி காலம் கடத்தும் நோக்கில் அதைச் செய்வோம், இதைச் செயற்படுத்துவோம் என வரட்டு அறிக்கைகளை மட்டும் அரசதரப்பு விட்டுக்கொண்டே இருக்கப்போகிறது என்பதே நடைமுறைச் சாத்தியமாகும் விடயமாகும்.

இந்தச் சூழலில் - நாளுக்குநாள் அதிகரித்த அளவில் தொடர்ந்துவரும் சமாதான மற்றும் அமைதிச் சூழலுக்கான அச்சுறுத்தல்கள் போர்நிறுத்தம் - மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டை செயலிழக்கச் செய்துவிடும் அபாயத்தை ஏற்படுத்திவருகிறது என்பது கவலைதரும் விடயமாகும்.

இந்த நிலையை உருவாக்கக் காரணமான சக்திகள் எவையென்பது தெரிந்தும் அரச தரப்பினர் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்காது வருவது, அரசின் சமாதானம் மீதான பொறுப்பு மற்றும் அக்கறையின்மையை உறுதிசெய்வதாக உள்ளது.

இந்த நிலையில், போர்நிறுத்த உடன்பாட்டைப் பேணுவதில் தாங்கள் உறுதியாக இருக்கப்போவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வும் விரைவில் கூட்டறிக்கை ஒன்றை விடப்போவதாக செய்தி ஒன்று வந்துள்ளது.

- இது நகைப்புக்கிடமான விடயமாகும்.


- வெறும் அறிக்கைகளை விட்டுக்கொண்டே மக்களையும், உலகத்தையும் ஏமாளிகளாக்க முனையும் தென்பகுதி அரசியல் தலைமைகளின் வாக்குறுதிகளை நம்ப இனிமேலும் எவரும் தயாராக இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்வது அவசியமாகும்.

கடந்த கால வரலாறு அவர்களை நன்கு எல்லோருக்கும் இனங்காட்டியே உள்ளது.

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

## நாடும் நடப்பும்

**செய்தி -** அரசாங்கம் படைத்தரப்பினரின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தாது விடுவதனால் சமாதான முயற்சிகள் மீதான நம்பிக்கையை தமிழ்மக்கள் முற்றாக இழந்துவிட்டனர் என அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



# மக்கள் வன்முறைகளில் ஈடுபடுவதை புலிகள் தடுத்து நிறுத்த வேண்டுமாம்

## பிரிகேடியர் தயா ரத்னாயக்க



கொழும்பு—

யாழ்.குடாநாட்டில் சில கவலைக்குரிய சம்பவங்கள் இடம்பெறுகின்ற வேளைகளில் - மக்கள் வன்முறை செயல்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான செயல்களில் ஈடுபடும் மக்களைத் தடுக்க விடுதலைப் புலிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இராணுவப் பேச்சாளர் தயா ரத்னாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இணுவில் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு மீண்டுமொரு யுத்தம் ஏற்பட இராணுவம் ஒருபோதும் தயாரில்லை. அதேவேளை, அப்படி எந்தவொரு இராணுத்தினராவது, சமாதான உடன்படிக்கையை மீறி, யுத்தம் ஒன்றை மீண்டும் ஏற்படுத்த முயற்சிப்பாராயின், அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இணுவில் சம்பவத்துடன் தொடர்புபட்டு, தற்போது கைதாகியுள்ள இராணுவத்தினர் மீது விசாரணைகளின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக இராணுவம், பொலிஸார் ஆகிய இரு தரப்புகளும் விசாரணைகளை நடத்தி வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் வீதிகள் புனரமைக்கப்படவில்லை

ஆழியவளை—

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் வீதிகளைப் புனரமைப்பதற்குப் பல லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என இந்தப்பகுதி பொது அமைப்புகள் கவலை தெரிவித்தன.

சுனாமி அனர்த்தத்தால் மிகவும் பாதிப்புக்கு உள்ளான இந்தப் பிரதேசத்தின் மாமுனை தொடக்கம் கேவில் வரையான வீதியையும், மருதங்கேணி சந்தி - ஆழியவளை வரையான வீதிகளைப் புனரமைப்பதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாமை காரணமாக சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேச மக்களுக்கு பாடசாலைகள் மற்றும் வீட்டு வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளபோதும், போக்குவரத்து வசதி அசௌகரியங்கள் காரணமாக அவை பல சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

# பொலிஸாருக்கு எதிராக மாணவன் மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு—

பன்னல பொலிஸாருக்கு எதிராக பாடசாலை மாணவன் ஒருவர் ஆசிய மனித உரிமைகள் ஆணையகத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

ஆசிய மனித உரிமைகள் ஆணையகத்தின் தம்புள்ள காரியாலயத்தில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் தமது வீட்டுக்கு வந்த 6 பொலிஸ் அதிகாரிகள் தம்மைத் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது தந்தைக்கு எதிராக நீதிமன்ற பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது. அது தொடர்பாக விசாரணை செய்யவந்த பொலிஸார் தம்மைத் தாக்கியதாகவும் குறித்த மாணவர் தெரிவித்தார்.

தாக்குதல் தொடர்பாக பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்தால், தம்மைக் கொலை செய்யப்போவதாகப் பொலிஸ் அதிகாரிகள் எச்சரித்ததாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தற்காப்புப் பயிற்சி தொடர்பான கருத்தரங்கு

கொழும்பு—

உன்னிச்சை கிராம மக்களுக்கான தற்காப்பு பயிற்சி தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் உன்னிச்சை மீனவர் சங்கக் கட்டடத்தில் கரடியனாறுக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இந்துஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் - மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தங்கையா. கல்விப் பிரிவு களமுனை ஆசிரியர் அறச்செல்வன், கரடியனாறு கோட்ட இராணுவத் தளபதி பாஸ்கரன், நிர்வாக சேவை துணைப்பொறுப்பாளர் சினேகராஜ், நீதியாளர் யோகன் பாதர் மற்றும் 100 இற்கும் மேற்பட்ட பொது மக்களும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் இங்கு கலந்துகொண்ட பொறுப்பாளர்கள், தளபதிகளால் மக்களுக்கு கடந்தகால போராட்ட வரலாறு பற்றி எடுத்துரைக்கப்பட் டது.

## வாசகர் நோக்கு

# யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் வளர ஆவன செய்யப்பட வேண்டும்!

தங்கள் 31.07.2005 பத்திரிகையில் எஸ்.செல்வம் எழுதிய மத்தியஸ்தர்களுக்கான போட்டிகள் இல்லை என்ற தலைப்பில் வாசகர் நோக்கு படித்து பல விடயங்களை அறிந்து கொண்டேன்.

எதற்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் 3 வருடங்களுக்கு மேலாக பொதுக்கூட்டம் கூடாதிருக்கிறார்கள் என்பதை அங்கத்துவம் வகிக்கும் கழகங்கள் கிரிக்கெட் ரசிகர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

போட்டிகள் நடத்தாத கிரிக்கெட் சங்கம் எதற்காக கழகங்கள் நடத்தும் போட்டிகளைக் குழப்பவேண்டும்.

ஒழுங்காக செயற்படாதிருக்கும் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் 40 வருடங்களுக்கு மேல் ஒழுங் காக செயற்பாடுகளை மேற்கொண்டு, சேவை யாற்றி வரும் யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத் தைக் குழப்பும் வகையில் ஏன் நடந்துகொள்கிறார் கள்.

இலங்கை கிரிக்கெட் சபையுடன் இணைப்பு இல்லாதுபோனால் அதனால் பாதிப்படைவது யார்?

யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் வளர்ச்சியடையத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கழகங்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று யாழ். கிரிக்கெட் ரசிகர்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

யாழ்ப்பாணம்

அருண்

செய்திக் கட்டுரை... இரா.வின்

# வளம் பெறுமா வரணி வடக்கு கிராமம்

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தேவைகள் பல வடிவங்களில் தோற்றம் பெறுகின்றன. ஆனால் தன்னுடைய வளங்களைக் கொண்டு அவற்றை நிறைவு செய்ய முற்படும் போதே அவன் பல்வேறு நெருக்கீடுகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் உள்ளாகின்றான்.

ஆனால் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாத நிலையில் பலர் உள்ளனர். யாழ்ப்பாணத்தின் புறநகர்ப் பகுதியிலுள்ள கிராமங்களில் அநேகமானவை அடிப்படைத் தேவைகளுக்காகக் காத்திருக்கும் கிராமங்களாகவுள்ளன.

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் தென்மராட்சியின் எல்லைக் கிராமம் வரணி வடக்கு. ஜே/339 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட இந்தக் கிராமம் அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட பாரம் பரியத்தைக் கொண்டது. அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில், நாளாந்தம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர் இந்தக் கிராம மக்கள். இலங்கை - இந்திய இராணுவங்களின் ஆக்கிரமிப்பு, அடாவடித்தனங்களுக்கு உட்பட்டதால், இருந்த வளங்களையும், வசதி வாய்ப்புகளையும் இழந்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இந்தக் கிராமத்தில் 1500 பேர் வரை வசிக்கின்றனர். இவர்களில் 400 பேர் கல்வி கற்கக் கூடியதாக இருந்தும், 300 பேர் மட்டுமே கல்வி கற்கின்றனர். கூலித் தொழிலாளர்களான இந்தக் கிராமத்தவர்கள் - தம் தேவைகளுக்கு குறைவாகவே நாளாந்த வருமானம் பெறுகிறார்கள். சிறு தொகை யைக் கொண்டு 6 பேர், 9 பேர் என அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களை வழிநடத்த முடியாதவர்களாகவுள்ளனர். குடும்பநிலை காரணமாக வேலைக்குப் போகவேண்டுமென்பதால், கல்வியை இவர்களால் முதன்மைப்படுத்த முடியவில்லை.

வரணி வடக்கு அ.த.க.பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கானது. இந்தப் பாடசாலைக்கென கட்டடமும் அரைகுறையான தளபாடங்களுமுள்ளனவே தவிர, வேறு எவ்வித வசதி வாய்ப்புகளுமின்றி, கடந்த 15 வருடங்களாக இயங்கிவருகிறது. குடிநீர், மலசலகூடம், பொழுதுபோக்கு விளையாட்டு வசதிகளுக்கான ஏற்பாடுகள் எவையும் இல்லை.

ஆசிரியர், அதிபர் என இருவரைக் கொண்டு 30 மாணவர்களுடன் இயங்கிவரும் பாடசாலையிலேயே பாலர் பாடசாலையும் இயங்கிவருகிறது. அத்துடன் மழை காலங்களில் வெள்ளத்தில் மிதக்கும் பாடசாலையாகவுமுள்ளது.


வரணி வடக்கைச் சேர்ந்த - திருச் செல்வம் லூத்துமலர் இருவரும் இவ்வாறு கூறுகின்றனர்.

இராணுவம் வந்ததால் நாங்கள் இடம் பெயர்ந்து வடமராட்சியில் போய் இருந்தனாங்கள் ஆறுவருசமா இருந்தம்.

இங்க திரும்பி வந்துபார்த்தா வளவு தான் கிடக்குது... நாங்க - இருந்த கிடுகு தடிகளைக் கொண்டு தான் கொட்டில் போட்டு இருக்கிறம். எங்களை யாரும் வந்து பாக்கிறதில்ல. றோட்டுக் கரையில் இருந்தும் உதவி செய்ய யாரும் முன் வாறதில்ல. தண்ணீர் இல்லாதது பெரிய கஷ்ரமாக இருக்கு.

கோடை காலத்தில் கிணறுகளில் தண்ணி வற்றிவிடும். எங்கட இந்தப் பாவப்பட்ட வாழ்க்கையை நாங்கள் யாரிட்ட சொல்லுறது.

இப்ப வீடு கட்டித் தாறம் எண்டு பதிஞ்சிருக்கினம். இனித் தாறத்துக்கு மேலதான்... என நீண்ட பெரு மூச்சுடன் உரையாடலை நிறைவு செய்தனர்.



இங்குள்ள கூலித் தொழிலாளியான கிருஷ்ணன் அழகுராசா தெரிவிக்கையில்- அரசசார்பற்ற நிறுவனங்கள் பாராமுகமாய் செயற்பட்டு வருகின்றன. வசதியான ஆட்களும் உதவிகளைப் பெறுகினம் . இதனால் போட்டி, பொறாமைகள் ஏற்படுகின்றன. எங்கட கிராமத்துக்கு குடிநீர், மலசல கூட வசதிகளை ஏற்படுத்தித்தர வேணும். றோட்டில் இருந்து 200 மீற்றர் தூரத்திலுள்ள எங்கட வீடுகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏன்தான் எம்மை இருட்டில் வைத்து அழகு பார்க்கினமோ தெரியாது.

இராணுவ நடவடிக்கையால் 50 இற்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டன. இவற்றில் அநேகமான வீடுகள் மண் வீடுகளாக இருந்தும் அழிக்கப்பட்டன.

இடம் பெயர்ந்து போய் ஆறு வருஷத்துக்குப் பிறகு 2001 ஆம் ஆண்டு தான் இங்க வந்தம். குடிநீர் கிணறொன்றுஇருந்தது.

இந்திய ஆமி வந்ததோட, அந்தக் கிணறு அநியாயமாய் போயிற்று. அளவுக்கதிகமாக ஏதோ பவுடரைப் போட்டதால் உவராய்ப் போயிற்று. இப்ப ஒரு சின்னக் கிணறு - அதில தான் இந்தளவு குடும்பமும் பாவிக்கிறம்.



திருச் செல்வம் லூத்துமலர்


தண்ணீர் ஊற ஊற அள்ளி வந்து தெளியவைச்சுப் பாவிக்கிறம். எங்களுக்கு ஏன் இந்த நிலை என்று தெரியேல்ல. எங்கட கிராமத்தை முன்னேற்றுவதற்கு எங்கட பிள்ளைகள் படிக்க வேணும். அவர்களாக முன்வந்து சம்பந்தப்பட்ட ஆட்களோடு தொடர்பு கொண்டு செயற்பட வேண்டும். இவற்றைக் காணமுடியேல்ல.

நாங்க தோட்டத்தை நம்பி இருந்தனாங்க. இப்ப தோட்டம் செய்ய இயலாது. கூலித் தொழிலுக்குப் போய்த் தான் குடும்பத்தைப் பாக்க வேண்டிய நிலையிலுள்ளோம். இங்குள்ள மாணவர்கள் கல்வி கற்க வேண்டிய நிலையில், குடும்பச் சுமை காரணமாக வேலைக்குப் போகினம் எனக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மனித முன்னேற்ற நடுநிலைய (கியூடெக்) தென்மராட்சிப்பிரதேச சமாதான ஊக்குவிப்பாளர் கா.ஜீவஸ்காந்தன் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தக் கிராமத்தை கிராம சேவையாளரின் உதவியுடன் ஆய்வை மேற்கொண்டு இங்கு வேலை செய்யத் தொடங்கினேன். இந்தப் பகுதி கிராமப் பெரியோர்களைச் சந்தித்து - சிறுவர், இளைஞர் குழுக்களை அமைத்து, அதனூடாக ஒன்றுபட்ட சமூகத்தை உருவாக்க முற்பட்டு, செயற்பட்டு வரு கிறேன்.

வெளித் தொடர்புகளை ஏற்படுத்த முன்வருகிறார்கள். மற்றவரை அறிய



வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டதுடன், குழு ரீதியான கலந்துரையாடல்களை மேற்கொண்டு, தங்களது தேவைகளை இனம் காண்கின்றனர். இவற்றைப் பார்க்கையில் - கிராம ரீதியாக ஒன்றித்துச் செயற்படும் மனோநிலையை வளர்த்துள்ளனர். மாதாந்தம் பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம். இவற்றிலே மனித உரிமைச் செயற்பாடுகள், சிறுகைத் தொழில் முயற்சிக்கான வழிகாட்டல்களை ஏற்படுத்தியுள்ளோம்.

மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் இருக்கின்றார்கள். இவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தென்மராட்சியின் எல்லைக் கிராமமான இந்தக் கிராமம் - இராணுவத்தால் முற்றாக அழிக்கப்பட்டது. ஆனால் இதற்கான இழப்பீடுகள் இதுவரை வழங்கப்பட்டதாக இல்லை. அரச, அரசசார்பற்ற, மத நிறுவனங்கள் என எவையும் இந்த மக்களின் துயர் துடைக்க முன்வரவில்லை.

நீரின்றி, மின்சாரமின்றி - வரட்சியிலும், இருட்டிலும் மூழ்கியுள்ள இவர்களுக்கு மேலதிகமாக எதனையும் வழங்காது அன்றாடத் தேவைகளை யாவது நிறைவு செய்ய வேண்டும் என, தன் கருத்துகளை நிறைவு செய்தார்.

**இந்தக் கிராமத்தில்....**

☆ 60 இற்கும் மேற்பட்ட வீடுகள் இராணுவத்தால் முற்றாக அழிக்கப்பட்டன.

☆ பனை வெல்லக் கைத்தொழில் நிலையம் கைவிடப்பட்டு பல வருடங்களாகின்றன.

☆ 1500 பேருக்கு ஒரே ஒரு குடிநீர் கிணறு மாத்திரம் உள்ளது.

☆ மின்சார வசதி இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.



திருச்செல்வம் லூத்துமலர்

☆ கிராமத்துக்கான உள்வீதிகள், மழைநீர் வழிந்தோடுவதற்கான ஒழுங்குகள் எவையும் இல்லை.

☆ ஆரம்பப் பாடசாலையோ, பொழுது போக்கு வசதிளோ ஏதும் இல்லை.

☆ மாணவர்களுக்கான கல்வித் தூண்டல்கள் ஏற்படுத்தப்படவில்லை.

இவை ஓரளவேனும் ஏற்படுத்தப் படும் போதே இந்தக் கிராமம் வளர்ச்சியடையும்.

இவற்றை இவர்கள் தான் செய்ய வேண்டுமென்ற நிலைப்பாட்டை விட்டு, தகுதியானவர்கள் முன் வந்து உதவ வேண்டும். தேவைகளுக்கென தனித்தனியாக ஒவ்வொரு நிறுவனங்களையும், நிறுவனம் சார் செயற்பாடுகளையும் அறிக்கை வடிவிலும், ஊடகங்கள் வாயிலாகவும் (எல்லோருமல்ல) வெளிப்படுத்தி நிற்கிறார்களே தவிர செயற்பாடுகளில் இல்லை.

போர்ச் சூழலால் பாதிக்கப்பட்டவர்கள் உடைமைகள், உறவுகளை இழந்தவர்கள் வடக்கு - கிழக்கின் பல பகுதிகளில் உள்ளனர்.

இவர்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் நிலை மிகவும் வேதனைக்குரியது. கரையோரக் கிராம மக்களையே இப்பொழுது சகல நிறுவனங்களும் தேடிஓடுகின்றன.


போரால் பாதிக்கப்பட்ட மக்களையும், அவர்களது கிராமங்களையும் புனரமைக்கவோ, அவர்களுக்கான உதவிகளை வழங்கவோ முன் வருவதில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன் வருவதில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவிகள், புனரமைப்புகள் தேவை தான். ஆனால் உதவிகள் தேவையானவர்ளுக்கு தேவையான பொழுதுகளில் வழங்க வேண்டும்.

கிராமத்தையோ, கிராமம் சார்பான அடிப்படை வசதிகளையோ விருத்தி செய்யும்போது, கிராமத்தவர்களை விழிப்படையச் செய்யலாம். யாழ்ப்பாணம் மனித முன்னேற்ற நடு நிலையம் இந்தக் கிராமத்தில் சிறுவர், இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களுடைய செயற்பாடுகளால் கிராமத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்துவதுடன், ஏனைய கிராமத்தவர்களுடனான ஒன்றுகூடல் கருத்தாளர்களையும் மேற்கொண்டு வருகிறது.

அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், தொண்டர் அமைப்புகள் என, தாம் மக்களுக்காகவே செயற்படுவதாகத் தம்பட்டம் அடிக்கின்றனர். இவர்கள் மக்களின் பிரதிநிதிகளாக மக்களுக்காகவே எல்லாம் என்ற கருத்துகளை இந்தக் கிராமத்தவர்கள் ஏற்கத் தயாராக இல்லை.

ஏன் வரணி வடக்கிலுள்ளவர்கள் மனிதர்கள் இல்லையா? அவர்களுக்கு - உணர்வுகள், விருப்பங்கள், தேவைகள் இல்லையா? அல்லது இப்படி ஒரு இடமிருக்கிறது என்பதை இவர்கள் இன்னும் அறியவில்லையா? காலத்தின் நகர்விலேயே வரணி வடக்கு காப்பாற்றப்படுமென்றால், இன்னும் இவர்கள் எத்தனை வருடங்கள் காத்திருக்க வேண்டும்?

# மேற்கிந்தியத்தீவுகளுடன் இந்திய அணி 7 ஓட்டங்களால் மயிரிழையில் வெற்றி!



கொழும்பு —

இந்தியன் ஓயில் கிண்ணத்துக்காக நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் நேற்று கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் இந்திய, மேற்கிந்திய அணிகளுக்கிடையில் நடைபெற்ற பகல் - இரவு ஆட்டத்தில் இந்திய அணி 7 ஓட்டங்களால் மயிரிழையில் வெற்றிகண்டது.

நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மேற்கிந்திய அணித் தலைவர் சந்தர்போல் காயமடைந்ததால், அணிக்கு ஜோசப் தலைமை தாங்கினார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. கங்கூலியும் ஷேவாக்கும் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

ஆட்டத்தின் தொடக்கத்திலேயே மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்களின் பந்து வீச்சை சமாளிக்க இந்திய அணி திணறியது. இதற்கிடையில் கங்கூலி 2 ஓட்டங்கள் பெற்ற நிலையில் காயமுற்று மைதானத்திலிருந்து வெளியேறியதையடுத்து, அணியின் ஓட்ட எண்ணிக்கை 21 ஆக இருந்த போது அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன.

முதலில் லக்ஷ்மன் 7 ஓட்டங்களுடனும், அடுத்து ஷேவாக் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

கங்கூலி, ஷேவாக், லக்ஷ்மன் ஆகியோர் 47 பந்துகளில் 15 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொடுத்தனர்.

அடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கை 51 ஆக இருந்த போது ராவிட்டும் 10 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.

இதன் பின்னர் யுவராஜ் சிங் - கைவ் ஜோடி இணைந்து அபாரமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. யுவராஜ் சிங்கின் அதிரடி ஆட்டம் இந்திய அணியின் பிற்பகுதி ஆட்டத்தை மிகவும் பரபரப்புக்குள்ளாக்கியது.

216 ஓட்டங்களை இந்திய அணி பெற்றிருந்த போது யுவராஜ் சிங்கின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இவர் 114 பந்துகளில் 11 பவுண்டரிகள் 1 சிக்ஸருடன் 110 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து கைவ் - டோனி ஜோடியும் அபாரமாக ஆட 50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 262 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் 103 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் கைவ் 83 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும், டோனி 13 பந்துகளில் 1 பவுண்டரி 2 சிக்சருடன் 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பட்லர், பவல், பாங்ஸ்,



டியோநரைன் ஆகியோர் தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதனையடுத்து 263 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றிபெறலாமென்ற கடினமான இலக்குடன் மேற்கிந்திய அணி துடுப்பெடுத்தாடியது. இதில் மார்ஷல் மற்றும் மோட்டன் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். எனினும் அணி 37 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் மார்ஷல் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின் மோட்டனுடன் இணைந்த ஜோசப் 4, டியோநரைன் 6, பாங்ஸ் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். எனினும் மோட்டனுடன் சிமித் இணைந்து அதிரடியாக விளையாடினார். இவர் 12 பந்துகளில் 2 சிக்ஸர், 2 பவுண்டரிகள் அடங்கலாக 26 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் கும்ளேயின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து பவல் இணைந்த போதும் அவர் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் மோட்டனுடன் ராம்டீன் இணைந்தார். இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் மேற்கிந்திய அணி வெற்றி பெறுமென எதிர்பார்க்கப்பட்டது. இந்த ஜோடியைப் பிரிப்பதற்கு இந்திய பந்துவீச்சாளர்கள் திணறினர். எனினும் 104 பந்துகளில் ஒரு சிக்ஸர், 6 பவுண்டரிகள் அடங்கலாக 84 ஓட்டங்களைப் பெற்றிருந்த மோட்டன் ஆட்டமிழந்தார்.

இதன்பின் ராம்டீனுடன் இணைந்த மற்றையவர்களான பெஸ்ட் 3, பட்லர் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தும், பவல் 5, ராம்டீன் 74 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காத நிலையில் 50 ஓவர்கள் முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 255 ஓட்டங்களையே பெற்று துரதிஷ்டவசமான முறையில் தோல்வியைத் தழுவியது. இந்திய பந்துவீச்சாளர்கள் 15 ஓட்டங்களை உதிரிகளாக விட்டுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கும்ளே 3, பதான் மற்றும் நெஹ்ரா இருவரும் தலா 2, ஷேவாக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



இந்திய - இலங்கை அணிகளுக்கிடையேயான இறுதிப்போட்டி நாளை பிரேமதாஸ மைதானத்தில் பகல் - இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

## யாழ்.மாவட்ட விளையாட்டு விழாவில் 3 புதிய சாதனைகள்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இதில் முதல் நாள் மூன்று புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் சங்கானை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என். ஸ்ரீவித்தியா 13.4 செக்கனில் ஓடி புதிய சாதனை நிலைநாட்டினார்.


பெண்களுக்கான முப்பாய்தல் நிகழ்ச்சியில் யாழ்ப்பாணப் பிரதேச யெலகத்தைச் சேர்ந்த சி.வாசுகி 10.24 மீற்றர் தூரத்தைக் கடந்தும், கு.தர்சினி குண்டெறிதல் நிகழ்ச்சியில் 9.34 மீற்றர் தூரத்தை எறிந்தும் புதிய சாதனைகளை நிலைநாட்டினர்.

# இங்கிலாந்து இரண்டு ஓட்டங்களால் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது!

எட்பாஸ்டன் —

இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் எட்பாஸ்டன் மைதானத்தில் நடைபெற்றுமுடிந்த ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 2 ஓட்டங்களால் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்து திறில் வெற்றி பெற்றது.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 308 ஓட்டங்களுக்குள் சுருண்டதைத் தொடர்ந்து இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தைத் தொடர்ந்தது.



இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட போது இங்கிலாந்து அணி 1 விக்கெட் இழப்புக்கு 25 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இருந்தது.

நேற்றுமுன்தினம் மூன்றாவது நாள் ஆட்டம் தொடங்கியபோது அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுக்களை பிரட் லீ சாய்த்தார். இங்கிலாந்து அணியின் ஸ்கோர் 27 ஆக இருந்தபோது ட்ரெஸ்கொதிக், 29 ஆக இருந்தபோது வோண், 31 ஆக இருந்தபோது ஹொாகாட் ஆகியோர் வீழ்த்தப்பட்டனர்.

ட்ரெஸ்கொதிக் 21, வோண் 1, ஹொாகாட் 1 ஓட்டங்களை எடுத்தனர். இதன் பின்னர் பெல் - பீற்றர்சன் ஜோடி ஆட்டத்தைத் தொடங்கியது.

பீற்றர்சன் அதிரடியாக 2 சிக்ஸர்களுடன் 35 பந்துகளில் 20 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், வோனின் பந்துவீச்சுக்கு இரையானார். சற்று நேரத்தில் ஸ்கோர் 75 ஆக இருந்தபோது பெல் 43 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 21 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார்.

75 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இங்கிலாந்து அணிக்கு புத்துணர்ச்சி கொடுக்கும் வகையில் பிளின்ரொப் களமிறங்கினார். அவரது ஆட்டத்தில் அனல் பறந்தது.

இதேவேளை, ஸ்கோர் 101 ஐ எட்டியபோது ஜோன்ஸ் 9 ஓட்டங்களுடன் லீயின் பந்துவீச்சில் விக்கெட்டைப் பறிகொடுத்து பவிலியன் திரும்பினார்.

அடுத்து ஸ்கோர் 131 ஆக இருந்த போது அடுத்தடுத்து ஜைல்ஸ், ஹார்மிசன் ஆகியோரின் விக்கெட்டுக்களை வோன் கைப்பற்றினார். ஜைல்ஸ் 8 ஓட்டங்களை எடுத்தார். ஆனால் ஹார்மிசன் ஓட்டமெதனையும் பெறாமலே ஆட்டமிழந்தார்.

அடுத்து பிளின்ரொப்புடன் சைமன் ஜோன்ஸ் களம் புகுந்தார். அதிரடி ஆட்டத்தின் மூலம் பிளின்ரொப் ஓட்டங்களைக் குவித்தார்.




எனினும் ஸ்கோர் 182 ஐ எட்டியபோது பிளின்ரொப் ஆட்டமிழந்தார்.

இவர் 86 பந்துகளில் 4 சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 73 ஓட்டங்களைக் குவித்தார். ஜோன்ஸ் 23 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 12 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

52.1 ஓவர்களில் இரண்டாவது இனிங்ஸில் இங்கிலாந்து அணி 182 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பந்துவீச்சில் வோன் 6 விக்கெட்டுக்களையும் லீ 4 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர். இதன் மூலம் வோன் 599 விக்கெட்டுக்களை எடுத்துள்ளார்.

முதல் இனிங்ஸில் 308 ஓட்டங்களை அவுஸ்ரேலியா பெற்றிருந்ததனால், இரண்டாவது இனிங்ஸில் வெற்றி இலக்காக 282 ஓட்டங்களை எடுக்கவேண்டிய நிலையில் ஆட்டத்தைத் தொடர்ந்தது.

ஆனால் அவுஸ்ரேலிய அணி 48 ஓட்டங்களை எடுப்பதற்குள், லாங்கர் 28 ஓட்டங்களுடனும், பொண்டிங் ஓட்டமெதனையும் பெறாமலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

ஹைடன் - மார்ட்டின் ஜோடி திறமையாக ஆடினாலும் ஸ்கோர் 82 ஐ எட்டியபின்னர் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் வீழ்ந்தன. ஹைடன் 31, மார்ட்டின் 28, கடிச் 16, கில்கிறிஸ்ட் 1, ஜிலெஸ்பி 1, கிளார்க் 30 ஓட்டங்களை எடுத்த நிலையில் - 175 ஓட்டங்களுக்கு 8 விக்கெட் என்ற பரிதாப நிலையில் அவுஸ்ரேலிய அணி நேற்றுமுன்தினம் ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இந்த நிலையில் நான்காம் நாளான நேற்று ஆட்டம் ஆரம்பமாகியது. ஷேன் வோன் - பிரட் லீ ஜோடி இங்கிலாந்து பந்துவீச்சாளர்களின் பந்துகளை ஒரு பொருட்டாகவே எடுத்



துக் கொள்ளாமல் சிறப்பாக விளையாடியது. இதில் வோன் மிகச் சிறப்பாக தான் எதிர்கொண்ட பந்துகளை பவுண்டரிகளாகவும், சிக்ஸர்களாகவும் வெளுத்து வாங்கினார். இவ்வாறு இருவரும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில் அணி 220 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 59 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக 42 ஓட்டங்களைப் பெற்றிருந்த வோன், பிளின்ரொப்பின் பந்துவீச்சில் ஹிற் விக்கெட் முறையில் துரதிஷ்டவசமாக ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து பிரட் லீயுடன், கஸ்பரோவிச் இணைந்தார். இவர்கள் இருவரும் அவுஸ்ரேலிய அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும் வகையில் பொறுப்புடன் ஆடினர். இதனால் அந்த அணி வெற்றி பெறுமென்ற நிலை மைதானத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஏற்பட்டது.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய அணி வெற்றிபெறுவதற்கு 3 ஓட்டங்கள் பெறவேண்டியிருக்கையில், 31 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 20 ஓட்டங்களைப் பெற்றிருந்த



கஸ்பரோவிச்சின் விக்கெட்டை ஹார்மிசன் வீழ்த்தியதால், அவுஸ்ரேலிய அணி 279 ஓட்டங்களை மட்டுமே பெற்று 2 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் பிரட் லீ ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். உதிரிகளாக 40 ஓட்டங்கள் இங்கிலாந்து பந்துவீச்சாளர்களால் விட்டுக்கொடுக்கப்பட்டது.

பந்துவீச்சில் பிளின்ரொப் 4, ஹார்மிசன், ஜைல்ஸ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், ஹொாகாட், ஜோன்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த இரண்டாவது டெஸ்டில் இங்கிலாந்து முதல் இனிங்ஸில் 407 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 182 ஓட்டங்களையும், அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸில் 308 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 279 ஓட்டங்களையும் பெற்றது.

இவ்விரு அணிகளுக்கிடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

## விளையாட்டு

# கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்தை பற்றீசியன் கழகம் கைப்பற்றியது!



யாழ்ப்பாணம் —

கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதியாட்டத்தில் பற்றீசியன் விளையாட்டுக்கழகம் 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்திய கே.சி.சி.சி வெற்றிக் கிண்ண கிரிக்கெட்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெற்றது. இதில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 40 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லவேந்திரா, குமணன், நிரூபன், மதன்ராஜ் முறையே 60, 19, 10, 8 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் ஜெயமுகுந்தன் 4, பார்த்தீபன் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக் கழகம் 24 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பார்த்தீபன் 45 ஓட்டங்களும், விஜயாளன், சுஜீவன் 37, 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் ரதீஸ்குமார் 2, நிரூபன் லவேந்திரா தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் சிறந்த களத்தடுப்பாளராக விஜயாளனும், சிறந்த துடுப்பாட்டக்காரராக லவேந்திராவும், சிறந்த பந்துவீச்சாளராக ஜெயமுகுந்தனும், ஆட்டநாயகனாக பார்த்தீபனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## அம்பாறை துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி!

கொழும்பு —

அம்பாறை - மகா ஓயா பொலிஸ் பரிவுக்குட்பட்ட அரலகம்வில வனப் பகுதியில் பழங்களைப் பறிப்பதற்காகச் சென்ற மூவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததாக மகா ஓயா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

### இலங்கையர்...

125 சட்டவிரோத குடியேற்ற வாசிகளும் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளனர். இதேவேளை உயிரிழுந்த ஒருவரது சடலமும் மீட்கப்பட்டிக்கிறது.

இவர்கள் இலங்கை, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களெனத் தெரியவந்துள்ளது.

15 மீற்றர் நீளமான மீன்பிடிப் படகு ஒன்றிலேயே கிறிஸ் நாட்டின் தீவினை இவர்கள் அடைந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை லென்றாவினை குடாவில் இந்த மீன்பிடிக் கப்பல் காணப்பட்டதாக கிறிஸ் கப்பல் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

உடனடியாக அங்கு சென்ற கிறிஸ் கடலோரக் காவற்படை தேடுதல் நடத்தி அங்கிருந்த 125 பேரை கைது செய்ததுடன் ஒருவரின் சடலத்தையும் மீட்டது.

ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்டவிரோதமாக நுழைவதற்கான நுழைவாயிலாக கிறிசை பயன்படுத்தும் சட்டவிரோத குடியேற்றவாசிகள் ஆயிரக்கணக்கில் இங்கு கைதுசெய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

### செங்கலடி

விநாயகபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சிறீமோகன் (வயது 46) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் வாழைப் பழக்கடையை மூடுவதற்குத் தயாராகிக்கொண்டிருந்த போது இனந் தெரியாதோரால் கைக்குண்டொன்று வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலின்போது நடைபாதை வியாபார நிலைய்ங்கள் நான்கும் சேதமடைந்தன.

ஏறாவூர் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர் பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### திருமலையில்...

சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கமும் இணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

வர்த்தக நிலையங்கள், பொது இடங்களில் கறுப்புக் கொடி பறக்க விட்டும், வாழைமரம், தோரணங்கள் கட்டியும், சோககீதம் இசைத்தும் துக்கதினம் அனுஷ்டிக்குமாறு இரு அமைப்புகளும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - இந்தச் சம்பவத்தைக் கண்டித்து நேற்று துண்டுப் பிரசுரமும் வெளியிடப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - இன்று யாழ். குடாநாட்டிலும் துக்கதினம் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

(10,4)

### தமிழின..

தமிழ்மொழியால், இனத்தால், பாரம்பரியத்தால், பண்பாட்டால், நாகரிகத்தால், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இரத்தபாச உறவு கொண்டுள்ள ஈழத்தமிழர்களின் விடியலுக்கு நிரந்தரத்தீர்வு தனித் தமிழீழம் தான்.

ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க எத்தகைய தியாகமும் செய்ய தமிழின விடியல் புலிகள் இயக்கம் தயாராகவுள்ளது எனபனவாகும்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து தமிழகப் புனாய்வுப் பொலிஸார் இந்தக் கட்சியின் நடவடிக்கைகள் குறித்துத் தீவிரமா கக் கண்காணிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை - இந்தக் கட்சி ஆரம்பித்தது தொடர்பாக பசும்பொன் பாண்டியன் செய்தியாளர்களிடம் பேசும்போது -

நான் தி.மு.கவில் இருந்தபோது முன்னாள் அமைச்சர் தா.கிருஷ்ணன் கொலை செய்யப்பட்டார். தி.மு.க. பொதுக்குழுவின்போது இதெல்லாம் சகஜம் என்று கருணாநிதி கூறினார்.

உடன்பிறப்புகளுக்கு மடல்எழுதும் அவருக்கு விழும்புரம் மாநாட்டின் போது தா.கிருஷ்ணன் குறித்து மடல் எழுதினேன். இதனால் எந்த விளக்கமும் கேட்காமல் நான் கட்சியிலிருந்து நீக்கப்பட்டேன்.

தி.மு.கவை எதிர்ப்பதுதான் எங்கள் லட்சியம். வரும் சட்டசபைத் தேர்தலில் தி.மு.கவை எதிர்க் கும் எந்தக் கூட்டணியாக இருந்தாலும் நாங்கள் அவர்களுடன் கூட்டணி அமைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## படையினரால் கொல்லப்பட்ட இளைஞனின் இறுதிச்சடங்கில் பெருமளவானோர் பங்கேற்பு!



யாழ்ப்பாணம் —

இணுவில் சந்தியிலுள்ள சிகையலங்கரிப்பு நிலையத்தில் வைத்து இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட ஜெயசீலன் சாந்தரூபனின் இறுதி அஞ்சலி நிகழ்வு கோண்டாவில் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் எஸ்.தியாகராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - அஞ்சலி உரைகளை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஸ், சிகை ஒப்பனையாளர் சங்க சமாசத் தலைவர் மயில்வாகனம் , பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் நிகழ்த்தினர் இதனைத் தொடர்ந்து சாந்தரூபனின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை இடம் பெற்றது.

தொடர்ந்து மேற்படி நபரின் பூதவுடல் தாங்கிய பேழை ஊர்வலமாக தாவடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் வர்த்தகர்கள், சிகை ஒப்பனையாளர் சங்கத்தினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (82)

## ஐ.நா. அமர்வுகளில் சந்திரிகா பங்கேற்பார்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு அமர்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

அடுத்த மாதம் 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள உலகத் தலைவர்கள் கூட்டத்திலும், அடுத்த நாள் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 60 ஆவது அமர்விலும் ஜனாதிபதி சந்திரிகா கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது 122 நாடுகளின் தலைவர்கள், அரசாங்கத் தலைவர்கள் 55 பேர், இரண்டு உப ஜனாதிபதிகள் மற்றும் இரண்டு பிரதிப் பிரதமர்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (01)

### ஜனாதிபதி..

இந்த நிபந்தனைகளுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உடன்படாவிடின் தமது கட்சி சார்பாக ஜனாதிபதிபதி வேட்பாளரை ஜாதிக ஹெல உறுமய நியமிக்கும்.

தற்போது மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக உள்ள மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு விருப்பமுடையவராக உள்ளதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (தே)

### போர் நிறுத்தத்தை...

போர் நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுக்க தீவிர கவனம் செலுத்தவேண்டும். அப்போதுதான் போர் நிறுத்த உடன்படிக்கையை சரியான முறையில் நடைமுறைப் படுத்த முடியும்.

ஆகவே, போர் நிறுத்த உடன் படிக்கையைப் பாதுகாக்க விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அடுத்த சில தினங்களில் ஜனாதிபதி தேர்தல் திகதி!

### வெளியாகும் என்கிறார் அமைச்சர் டியூ

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் நடத்தப்படுமா என்பது குறித்து அடுத்த சில தினங்களுக்குள் தெரிந்து கொள்ள முடியுமென அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய திகதி குறித்து தீர்மானமெடுப்பது அரசியல் கட்சியொன்றின் கொள்கைக்கு அமைவாக அல்ல. மாறாக அது அரசியலமைப்புயாப்பிற்கு அமைவாகவே தீர்மானிக்கப்படும்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்தவேண்டுமென உயர் நீதிமன்றம் வழங்கவுள்ள தீர்ப்புக்கு அமைய அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை தேர்தல் ஆணையாளர் வெளியிடுவார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய திகதி குறித்து ஜனாதிபதி சந்திரிகா உயர் நீதிமன்றிடம் ஆலோசனை கேட்டதையடுத்து, அது தொடர்பாக உயர் நீதியரசர் சட்ட மா அதிபர் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதி ஆகியோர் ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தே)

### மட்டுவிலில்..

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கு ஆயுதக் குழு...

ஏற்படுமென்று நாம் கருதவில்லை.

ஆனால், தற்போது மிகவும் அவசர தேவை என்னவெனில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தவும், அது தொடர்பாக இணங்கிச் செல்லவும் இருதரப்பினரும் மீளவும் கலந்துரையாடல் களை நடத்தவேண்டும். இருதரப்பினருக்குமிடையே எவ்வித கலந்துரையாடலும் நடத்தப்படாமலிருப்பதே எனக்குக் கவலையளிக்கிறது.

இருதரப்பினரும் சந்தித்து, கலந்துரையாடல்களை நடத்தி நீண்ட காலமாகிவிட்டது. இவ்வாறான நிலை தொடர்வது யுத்தம் மூளுவதற்கான வாய்ப்பை உருவாக்கிவிடும். இருதரப்பினருக்கும் இடையில் தற்போதைய சூழ்நிலை நன்றாக இல்லை.

இருதரப்பினரும் தமக்கிடையேயான பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு மிகவும் ஆர்வமாக உள்ளனர் என்றே நான் நினைக்கிறேன். ஆனால், இதற்கு கிழக்கிலுள்ள ஆயுத சக்திகள் தடையாக உள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கையின் படி விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமது அரசியல் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவும், தமது உறுப்பினர்களை இடம் மாற்றுவதற்கும் சுதந்திரமுடையவர்கள். இந்த விடயம் நீக்கப்படுமாக இருந்தால் அது பாரிய சிக்கல்நிலையைத் தோற்றுவிக்கும்.

பொதுவாகவே போர்நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் வன்செயல்கள் குறைவடைந்துள்ளன. இது ஒரு ஆரோக்கியமான விடயமாகும். அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இதுவரை எவ்வித வன்செயல்களும் இடம்பெறவில்லை. இதுவே ஒரு சிறந்த அடையாளமாகும்.

ஆனாலும், யுத்தம் ஏற்படுவதற்கான அச்சநிலை தொடர்ந்த வண்ணமே உள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

### திருமலை...

அலுவலகத்திற்குப் பாதுகாப்பு வழங்கி வந்த பொலிஸார் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களை நோக்கி பதில் தாக்குதல் நடத்தினர். இதன் காரணமாக பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. அவர் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் பொலிஸார் அந்தப் பிரதேசத்தில் நடத்திய தேடுதலில் பற்றை ஒன்றிற்குள்ளிருந்து இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார். அவரிடமிருந்து கைத் துப்பாக்கி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

காயப்பட்டவர் வவுனியாவைச் சேர்ந்த இராஜேந்திரன் இராஜகுமார் (வயது 28) என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும், அவர் தம்புள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கந்தளாய் வீதியில் ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகிறது.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

கந்தளாய் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதால் திருகோணமலை மாவட்டத்திற்கும் வெளி மாவட்டங்களுக்குமான போக்குவரத்துத் தடைப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (10, 4)

### மட்டக்களப்பு...

இளைஞர் வழமைபோன்று கடற்தொழிலுக்குச் சென்றிருந்தார் என்றும் திடீ ரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது இனந் தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ரீ-56 ரக வெற்று ரவைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை
வழிகாட்டல் கருத்தரங்கு
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில்
அனைத்து மாணவர்களையும் அன்புடன் அழைக்கிறோம்!
விபரங்கள் உள்ளே
நமது ஈழநாடு

ஜூலை 15 முதல் ஒகஸ்ட் - 15 வரை என்றும் இல்லாத வகையில் அசத்தலான தள்ளுபடி 25% வரை
இன்றே விரையுங்கள்...
ஒசானிக் இம்பெக்ஸ்
192, பிரதான வீதி, கொழும்பு – 11.
T.P.011 - 2336720, 011 - 2327168

தரமிகு அறுசுவை உணவுகளுடன்
ஐஸ்கிறீம் வகைகளுடன் உங்களை நாடி
Mango'S
வெகு விரைவில்
C/4349

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.08.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.